உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

# குமரகுருபரன்



மலர் 19 || கீலக ஆண்டு மார்கழித் திங்கள் 1-ம் உ [15-12-68] || இதழ்-12

# சிதம்பர மும்மணிக்கோவை

## உரைநடை

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்,
பாலகவி
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

*( மலர் 19 இதழ் 11-ன் தொடர்ச்சி )*

கட்புலங் கதுவாது கதிர்மணி குயிற்றி
விட்புலஞ் சென்ற மேனிலை மாடத்து
வல்லியி னுடங்கு மயிலிளஞ் சாயற்
சில்லரித் தடங்கட் டிருந்திழை மகளிர்
அளவில் பேரழ காற்றியும் வாளா
இளமுலைத் தொய்யி லெழுதிய தோற்றம்
தருநிழற் செய்த வரமிய முற்றத்

தமரர் மாதரோ டம்மனை யாடுழி
இமையா நாட்ட மிருவர்க்கு மொத்தலின்
நற்குறி தெரிதற்கு நாகிளங் குமரர்
விற்குறி யெழுதி விடுத்தது கடுக்கும்
வலனுயர் சிறப்பிற் புலியூர்க் கிழவநின்
பொன்னடிக் கொன்றிது பன்னுவன் கேண்மதி
என்றுநீ யுளைமற் றன்றே யானுளேன்
அன்றுதொட் டின்றுகா றலமரு பிறப்பிற்கு
வெருவர லூற்றில னன்றே யொருதுயர்
உற்றுழி யுற்றுழி யுணர்வதை யல்லதை
முற்று நோக்க முதுக்குறை வின்மையின்
முந்நீர் நீந்திப் போந்தவன் பின்னர்ச்
சின்னீர்க் கழிநீத் தஞ்சா னின்னும்
எத்துணைச் சனன மெய்தினு மெய்துக
அத்தமற் றதனுக் கஞ்சல னியானே
இமையாது விழித்த வமரரிற் சிலரென்
பரிபாக மின்மை நோக்கார் கோலத்
திருநடங் கும்பிட் டொருவனுய்ந் திலனாற்
சுருதியு முண்மை சொல்லா கொல்லென
வறிதே யஞ்சுவ ரஞ்சாது
சிறியேற் கருளுதி செல்கதிச் செலவே.

கண்ணாகிய பொறியினால் பற்றப்படாமல் ஒளிமிக்க இரத்தினங்களைப்பதித்து விண்ணுலகத்தை அடைந்த மேலான தகுதியுடைய மாளிகைகளில் பூங்கொடிகளைப் போல அசைகின்ற இளமயிலின் சாயலையும், சில செவ்வரிகளையுடைய அகன்ற கண்களையும் கொண்ட திருத்தமான ஆபரணங்களையணிந்த பெண்கள் எல்லையில்லாத பேரழகைத் தாங்கியும், ஒரு பயனும் இல்லாதபடி இளமையான கொங்கைகளில் சந்தனக் குழம்பினால் கரும்பும் கொடியும் போல எழுதிய காட்சி கற்பகமரங்கள் நிழல் செய்கின்ற நிலா முற்றத்தில் தேவமங்கையருடன் அம்மனையாடும் வேளையில் இமையாக் கண்கள் இருவருக்கும் ஒப்ப இருத்தலின் நல்ல அடையாளந் தெரியும் பொருட்டு அந்த மகளிரது காதலர்களாகிய கட்டிளங் காளையர்கள் மன்மதனது கரும்புவில் குறியை எழுதிவிட்டது போல வன்மை மிக்க சிறப்புடையுடைய பெரும்பற்றப் புலியூருக்கு உரிமையுடையவனே! நினது பொன்னனைய திருவடிகளுக்கு ஒன்று சொல்லுவேன் கேட்பாயாக 'என்று நீ உள்

ளாயோ, அன்றே நானும் உள்ளேன். அன்றுதொட்டு இன்று வரை மாறி மாறி வருகின்ற பிறப்பிற்கு அஞ்சினேனில்லை. அவ்வப்போது உளதாகும் ஒவ்வொரு துன்பத்திற்கும், வருந்துவதையன்றி முன்னர் எல்லாப் பிறப்புக்களிலும் நிகழ்ந்த எல்லாத் துன்பங்களையும் நினைந்து வருந்துதற்குரிய அறிவு எனக்கு இல்லாமையால் பெரிய கடலை நீந்திக் கரைக்கு வந்த ஒருவன் பின்னர்ச் சிறிய உப்பங்கழியைக் கடக்க அஞ்சமாட்டான். அதுபோல இன்னும் எத்தனை பிறப்புக்கள் எனக்கு வந்தாலும் வரட்டும். அவற்றிற்கு யான் அஞ்சமாட்டேன். இமையா நாட்டத்தையுடைய அமரர்களிற் சிலர் எனது பக்குவமின்மையை அறியாதவர்களாய் அழகிய உனது திருநடனத்தைக் கும்பிட்டு இவ்வொருவன் உய்தி பெறுதிருக்கின்றானே ? வேதாகமங்களும் உண்மை சொல்லாதன தாமோ ? என வீணாக அஞ்சுவர். அவர்கள் அங்ஙனம் அஞ்சாமல் சிறிய வனாகிய எனக்கு செல்கதிச் செலவை அருளுவாயாக.

**சென்றவரைத் தாமாக்குந் தில்லைச்சிற் றம்பலத்து**
**மன்றவரைத் தாமாக்க வல்லவர்யார் — என்றுமிவர்**
**ஆடப் பதஞ்சலியா ராக்கினா ரென்பிறவி**
**சாடப் பதஞ்சலியார் தாம்.** (21)

சென்று வழிபட்டவர்களைச் சித்தமலம் அறுவித்துச் சிவமாகிய தாமாக்கி ஆட்கொள்ளுகின்ற தில்லைச் சிற்றம்பலத்துக் கூத்தப் பெருமானைத் தாமாக ஆக்கும் வல்லமை உடையவர்கள் யாரிருக்கிறார்கள் ? எனது பிறவியை எதிர்த்து ஒழிக்கின்ற அந்தப் பதஞ்சலி முனிவர் எப்பொழுதும் இவரை ஆடுதற்குப் பதம் சலியாதவராக ஆக்கினார்.

**தாமக் குழலினல் லார்விழி மீன்பொரச் சற்றுமினிக்**
**காமக் கருங்குழி யிற்சுழ லேங்கலந் தாடப்பெற்றேம்**
**நாமப் புனற்கங்கைப் பேராறு பாயநஞ் சங்களத்தும்**
**வாமத் தமுதமும் வைத்தாடு மானந்த மாக்கடலே** (22)

புகழ்மிக்க நன்னீரையுடைய கங்கைப் பேராறு பாய நஞ்சைக் கழுத்திலும் அமுதம் போன்ற உமாதேவியை இடத்திலும் வைத்து ஆடுகின்ற ஆனந்தப் பெருங்கடலில் கலந்தாடும் பேற்றைப் பெற்றிருக்கிறோம். மலர் சூடிய கூந்தலையுடைய மங்கையரது விழிமீன்கள் எதிர்த்துப் போர் செய்ய இனிச் சிறிதேனும் ஆசைப் பெருங்குழியில் சுழலமாட்டோம்.

(தொடரும்)

# திருமந்திரம் TIRUMANTIRAM

## ஆறுந்தந்திரம் Tantra the Sixth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,

*( மலர் 19, இதழ் 11-ன் தொடர்ச்சி )*

### தவமே அழியாச் செல்வம்
### Tapas alone is imperishable wealth

58. அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசும்
பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே
அமைத்ததோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி
இமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே.

Amidst the tumult of raging hatred, they perished,
The Kings, their ministers and their elephantine hordes;
But fixing their sights on divine Gnana and universal love,
The tapaswis immortals became, their eyelids not batting.

அரசவாழ்வு நிலையற்றது பகைவர்வர, அவரும், அமைச்சரும், ஆனைப்படையும் அழிவர். ஆனால் ஞானத்தையும், முத்தியையும் நாடி தவஞ் செய்வோர் கண்ணிமைத்தலில்லாத தேவர்போல் அழியா நிலை எய்துவர்.

### தவஞானமே பிறப்பறுக்கும்: சாத்திரஞானமன்று
### Only the inward look of tapas endeth birth not the knowledge of Scriptures

59. சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்தபிறவி அகலவிட் டோடுமே.

Come apart from the clever argumentation of Contending [theology,
And for a brief brief while, look inward;
That one look shall drive the nail into the coffin of birth
And for ever end its cycle.

சாத்திர நுட்பங்களைப் பயின்று வீணே வாணாளைப் போக்கவேண்டாம்; ஒரு கணப்போது உம்முள்ளே நோக்குக. அந்த அகப்பார்வை பிறவிமேல் பகுமரத்தாணிபோல் பாய்ந்து, அதனை அசைவறச்செய்யும். அதுவே பிறவியின் இறுதியாக முடியும்.

### தவம் வேண்டுதலும் வேண்டாமையும்
### Wh n tapas is needed and not needed

60. **தவம் வேண்டு ஞானந்தலைப்பட வேண்டின்**
**தவம் வேண்டா ஞானசமாதிகை கூடில்**
**தவம் வேண்டா மச்சகசமார்க்கத் தோர்க்குத்**
**தவம் வேண்டா மாற்றந் தனையறியாரே.**

Tapas thou needeth, if Gnana thou aspireth;
Tapas thou needeth not, When Gnana Samadhi thou [attaineth;
Tapas thou needeth not, an thou art in Sahamarga of [yoga;
They knoweth not the way that tapas transcendeth.

ஞானம் முற்ற தவம் வேண்டும்; ஞானம் முற்றி சமாதி கூடியபின் தவம் வேண்டாம்; யோகிகளுக்குந்தவம் வேண்டாம்; தவமே வேண்டாத அதீத நிலையை பலர் அறியார்.

(தொடரும்)

---


## "ஞானசம்பந்தம்"
அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளி வருகிறது, சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்

ஆண்டுக் கையொப்பம்,
உள்நாடு ரூ. 3 - 00 * வெளிநாடு ரூ. 4 - 00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்,
தருமபுரம். மாயூரம் P. O.

# முப்புரம் எரித்த முதல்வன்

(திரு. மயிலை, சீனி. வேங்கடசாமி அவர்கள்)

மாமல்லபுரம், தமிழர்களின் சிற்பக்கலைக்கு ஒரு பெருஞ் சிறப்பிடம். அங்கே எத்தனையோ பல, அழகிய வியத்தகு சிற்பங்கள் சிறப்புற அமைந்துள்ளன. எழில் கனிந்த அச் சிற்பங்களுள் ஒன்றின் படத்தினை, யான் அண்மையிற் காண நேர்ந்தது. அதனைப் பேராசிரியர் திரு. பண்டித. இராம. மீனாட்சிசுந்தரம் பிள்ளை எம். ஏ. அவர்கள், எனக்கு அனுப்பி வைத்ததுடன், அதற்குரிய விளக்கத்தினைத் தருமாறும் கேட்டிருந்தார்கள்.

அந்தச் சிற்பத்தின் படத்தைக் கண்டபோது, நான் பெரிதும் வியப்பு அடைந்தேன். சிவபெருமானுடைய வீரட்ட மூர்த்தங்களில் ஒன்றான திரிபுராந்தக மூர்த்தியின் திருவுருவம் அது. திரிபுராந்தக மூர்த்தியின் நின்ற கோலமாக அமைந்த சிற்ப உருவங்களைத் தான் நான் கண்டிருந்தேன். இருந்த கோலமாக அமைந்த திரிபுராந்தக மூர்த்தியின் சிற்ப உருவத்தை இதற்கு முன்பு நான் கண்டது இல்லை, ஆகவே அந்தப் படத்தைக் கண்டு வியப்பு அடைந்தேன்.

இந்தப் படத்தைப் பார்க்கும்போது, சிவபெருமான் தம்முடைய இடது கையில் பிடித்துள்ள நீண்ட வில் முதலில் நம்முடைய கருத்தைக் கவர்கின்றது. உடனே இது கோதண்டராமன் திருவுருவம் என்று நினைக்கத் தோன்றுகிறது. இவ்வுருவத்தின் மற்றக் கைகளில் காணப்படுகிற மற்ற ஆயுதங்களைக் காணும்போதுதான் இது கோதண்ட

---

*மேற்கண்ட கட்டுரை 'திருக்கோயில்' ஆசிரியர் அனுமதிபெற்று பிரசுரிக்கப்படுகிறது*

ராமன் உருவம் அன்று, சிவபெருமானுடைய உருவம் என்பதை உணர்கிறோம்.

உயரமான ஆசனத்தின் மேலே கம்பீரமாகவும் உவகையோடும் அமர்ந்திருக்கிற சிவபெருமான் சடாமகுடத்துடனும், நான்கு திருக்கைகளுடனும் காட்சியளிக்கிறார். வலது காலை மடக்கி ஆசனத்தின் மேல் படிய வைத்து இடது காலைத் தொங்கவிட்டுச் சிவபெருமான் சுகாசன மூர்த்தமாக அமர்ந்திருக்கிறார். நாண் ஏற்றாத வில்லைத் தரையில் ஊன்றி அதை இடது கையினால் பிடித்திருக்கிற இவர், வலது கையினாலே அம்பு ஒன்றை ஏந்திக்கொண்டிருக்கிறார். கூர்மையான அம்பின் தலைப்புறம் கீழ்நோக்கியும், இறகுகளுடன் கூடிய வால்புறம் மேல் நோக்கியும் இருக்கிறது. அம்பின் சிறகுகளின் மேலே அக்கினித் தேவனின் உருவம், மிகுந்த கோபத்துடன் காட்சியளிக்கிறது. அம்போடு சேர்ந்தாற்போல அக்கினித் தேவனின் உருவம் காணப்படுகிற போதிலும், அக்கினித் தேவன் அம்புடன் இணைந்திருக்கவில்லை. இந்த அம்பு சாதாரண அம்பு அன்று. தீயைக் கக்கும் "எரிமுகப் பேரம்பு" என்பதைக் காட்டுவதற்காகவே அம்புடன் சேர்ந்திருப்பதுபோலத் தீக்கடவுளின் உருவத்தை அமைத்திருக்கிறார், இந்த உருவத்தை அமைத்த சிற்பக் கலைஞர்! தீக்கடவுளின் முகத்தைச் சூழ்ந்து தீச்சுடர் அனலைக் கக்கிக்கொண்டு எரிகிறது. தீக்கடவுளின் கண்களும், கோரைப் பற்களும், அவர் சினங்கொண்டு சீறுவதைக் குறிக்கின்றன. "இதோ எரித்து விடுகிறேன் பார்" என்று சினத்தினால் துடித்துக்கொண்டிருப்பது போலத் தீக்கடவுளின் உருவம் அமைந்திருக்கிறது சிவபெருமான் கையிலுள்ள அம்பு, அனலைக் கக்கும் எரிமுக அம்பு என்பதைத் தெரிவிப்பதற்காகவே, தீக்கடவுளின் உருவத்தை அம்புடன் சேர்த்துச் சிற்பக்கலைஞர் சித்திரித்துக் காட்டியுள்ளார். சிவபெருமான் எரிமுகப் பேரம்பினால் திரிபுரத்தை எரித்தார் என்று புராணம் கூறுகிறது.

> "திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
> எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப"

என்று சிலப்பதிகாரக் காவியம் கூறுவது காண்க.

சிவபெருமான் திரிபுரம் எரித்ததை, மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவுந்தியாரில் அழகாகக் கூறுகிறார்.

**' வளைந்தது வில்லு விளைந்தது பூசல்**
**உளைந்தன முப்புரம் - உந்தீபற**
**ஒருங்குடன் வெந்தவாறு-உந்தீபற**
**"ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தம் கையில்**
**ஓரம்பே முப்புரம்–உந்தீபற**
**ஒன்றும் பெருமிகை-உந்தீபற''**

ஏகம்பர் (ஏக+அம்பர் - ஒரே அம்பை உடையவர்) ஆகிய சிவபெருமான் கையில், ஈரம்பு (இரண்டு அம்பு) இல்லை; ஒரே அம்புதான் இருக்கிறது. அந்த ஒரு அம்பைக் கொண்டே அவர், முப்புரத்தை எரித்து அழித்து விட்டார். இந்தக் கருத்தை, இவ்வுருவத்தை அமைத்த சிற்பி வெகு நன்றாகக் காட்டியுள்ளார். சிவபெருமான் கையில் ஒரே ஒரு அம்பை மட்டும் காட்டியிருப்பது மாத்திரம் அன்று. அம்பறாத் தூணி இந்தச் சிற்பத்தில் காணப்படவில்லை. வில்லைக் கொண்டு அம்பு எய்கிறவர்களுக்குத் தோளில் அம்பறாத் தூணி அவசியம் இருக்கும். ஆனால், ஏகம்பராகிய சிவபெருமானுக்கு அம்பறாத் தூணி தேவையில்லை. ஏனென்றால் அவர் ஏகஅம்பர்! இந்தக் கருத்தை வெகு நன்றாக விளக்கியிருக்கிறார், இந்தச் சிற்பத்தை அமைத்த சிற்பக்கலைஞர்! இந்தச் சிற்ப உருவத்தைப் பார்க்கிறவர்களுக்கு இந்த நுட்பமான பார்வையும் வேண்டும். சாத்திரக்கருத்தைத் தெரிவிக்கத்தானே சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன!

மேலும் இந்தச் சிற்ப உருவத்தை ஆராய்வோம் சிவபெருமானுடைய மற்றொரு வலது கையில் மழுவும் சூலமும் காட்சியளிக்கின்றன (மழு சோடரி). இந்த ஆயுதங்கள் பொதுவாகச் சிவபெருமானுடைய மூர்த்தங்கள் எல்லாவற்றிலும் காணப்படுவது வழக்கம் மழுவும் சூலவும் வெவ்வேறு தண்டுகளில் அமையாமல் இரண்டும் ஒரே தண்டில் அமைந்துள்ளன. சிவபெருமானுக்கே உரிய இந்த ஆயுதங்கள் இந்தச் சிற்பத்தில் அமையவில்லையானால், இந்த உருவத்தைக் கோதண்ட ராமன் உருவம் என்று கருதவேண்டியிருக்கும்.

சிவபெருமானின் இடது காலின் பக்கமாக, தண்டாயுதம் போன்ற ஒரு ஆயுதம் தொடையின் மேல் சாய்ந்து

கிடக்கிறது. இடது தொடையின் மேல் சாய்ந்து கிடக்கிற இந்த ஆயுதத்தையும் வில்லையும், சிவபெருமான் தம்முடைய மற்றொரு இடது கையினால் அணைத்துக்கொண்டிருக்கிறார். கனத்ததாகக் காணப்படுகிற இந்த ஆயுதத்தைக் காண்கிறவர் சிலர், இது தண்டாயுதம் என்றும், இதை வைத்துக் கொண்டிருக்கிற இந்த உருவம் துவாரபாலகரின் உருவம் என்றும் கருதுவர். உண்மையில் இது தண்டாயுதம் அன்று. கட்டங்கம் அல்லது கட்டுவாங்கம் என்னும் ஆயுதம் இது. கட்டுவாங்கம் என்பது ஒரு கோயிலின் தலைப்பில் முழுமையான மண்டை யோட்டைக் கட்டி வைத்திருக்கும் ஓர் ஆயுதம்! இது சிவபெருமானுக்கே உரியது. அப்பர் சுவாமிகளின் தேவாரத்தில் இது குறிக்கப்படுகிறது. பல்லவர்கள் காலத்துச் சிற்ப உருவங்களில் இது சாதாரணமாகக் காணப்படுகிறது. கட்டுவாங்கத்தைச் சுற்றிக்கொண்டு ஒரு நாகப்பாம்பு படமெடுத்து ஆடுவதை இடது கைக்குக் கீழே காண்க.

சிவபெருமானுக்கு இடது புறத்தின் மேலே இன்னொரு முத்தலை நாகம் படமெடுத்து ஆடிக்கொண்டிருக்கிறது. நஞ்சுண்டவராகிய சிவபெருமானுக்கு நாகப்பாம்புகள் உகந்த அணிகலன்களாக உள்ளன என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

அம்பையும் மழுவையும் பிடித்திருக்கிற விரல்களின் அமைப்பைப் பாருங்கள். இவற்றைக் கல்லில் அமைத்த சிற்பக் கலைஞரின் நுண்ணறிவை இவை புலப்படுத்துகின்றன,

திரிபுராந்தகமூர்த்தி அவுணர்களின் முப்புரங்களை எரிமுகப் பேரம்பினால் எய்து எரியச் செய்து அழித்தார் என்பது புராணக் கதை. இது பாமரமக்களுக்காகக் கூறப்படுவது. இதற்குச் சாத்திரக் கருத்தும் உண்டு. அது சைவசித்தாந்தக் கருத்து. இக்கருத்தைத் திருமூல நாயனார், தமது திருமந்திரப் பாட்டு ஒன்றில் நன்றாக விளக்கிக் கூறுகிறார்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவன மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே"

என்பது அச்செய்யுள்.

கருங்கல்லிலே புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ள இந்த அருமையான சிற்பம், ஏறத்தாழ மூன்று அடி உயரமும், இரண்டரை அடி அகலமும் உள்ளது.

இது அமைக்கப்பட்ட காலம் எது என்பதை ஆராய்வோம். சிவபெருமான் அமர்ந்திருக்கிற ஆசனத்தின் அமைப்பும், அவர் அணிந்திருக்கிற ஆடை ஆசனத்தின் மேலே தொங்கிக்கொண்டிருக்கிற அமைப்பும், பல்லவ அரசர் காலத்துச் சோமாஸ் கந்த மூர்த்தியின் அமைப்புப் போலக் காணப்படுகின்றது. மேலும், இவர் அணிந்திருக்கிற படித்த பூணூல், பல்லவர் காலத்துச் சிற்பங்களில் காணப்படுவதுபோலவே இடது தோளின் மேலிருந்து மார்பின் மேல் வந்து வலது கையின் மேல் செல்லுகிறது. இவ்வித அமைப்புகளைக் கொண்டு, இந்தச் சிற்பம் பல்லவ அரசர் காலத்துச் சிற்பம் என்று உறுதியாகக் கூறலாம். இது மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோவிலைச் சேர்ந்து காணப்படுகிறபடியால், அக் கோவில் அமைக்கப்பட்ட காலத்தில் இச்சிற்பம் அமைக்கப் பட்டிருக்கவேண்டும். கடற்கரைக் கோயிலை அமைத்தவன், **இராஜசிம்மன்** என்னும் இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகையால், அவர் காலத்தில் இந்தச் சிற்பமும் அமைக்சப்பட்டிருக்கவேண்டும். அதாவது இன்றைக்கு ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தச் சிற்ப உருவம், அருமையான கலைச் செல்வம்! நமது நாட்டிலே மூலை முடுக்குகளில் போற்றுவார் அற்று, அருமை பெருமை தெரியாமல் கிடக்கிற ஆயிரக்கணக்கான சிற்பக் கலைச்செல்வங்களில் இது ஒன்று. கடலிலிருந்து வீசுகிற குளிர்ந்த உப்பங்காற்றினாலும், வெயில் பனி மழையினாலும் தாக்குண்டு மழுங்கிப் போய், ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாக உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருக்கிறது

திரிபுராந்தக மூர்த்தமாக அமைந்துள்ள இந்தச் சிற்ப உருவம், புராணக் கருத்தையும், சித்தாந்தக் கருத்தையும் எவ்வளவு தெளிவாகக் காட்டுகின்றது! இந்த உருவத்தில் காணப்படுகின்ற மழு, திரிசூலம், நாகப்பாம்பு முதலிய பொருள்களுக்கெல்லாம் ஒவ்வொரு சாத்திரக் கருத்து உண்டு. அவற்றை எல்லாம் இங்கு எழுதவேண்டிய அவசியம் இப்போது இல்லை. இத்தகைய அருமையான சிற்ப உருவத்தைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் அனைவர்க்கும் உரிய கடமையாகும்.

# திருவைந்தெழுத்து

திரு. எ. கமலக் கண்ணன் அவர்கள்,
முருக நிலையம், விரூர்.

---

**அரிது அரிது மானிடராய் பிறத்தலரிது
மானிடராயினும் கூன் குருடு செவிடு பேடுநீங்கி பிறத்தலரிது**

என்பது ஔவையின் பொன்மொழி. மானிடப்பிறவியிலும் இந்த விதமான குறைகள் இல்லாமல் பிறந்த நாம், காலத்தை பொன்போல் போற்ற வேண்டும். இதையே ஆங்கிலத்தில் ' Time is Gold ' என்று கூறுவார்கள்.

காலத்தை வீணுக்காமல் வாழ்க்கைக்கு பெரிதும் பயன் படும் கல்வியை குற்றமற கற்றல் வேண்டும். கல்வியைக் கற்பது பதவிக்காக மட்டுமல்ல. கற்றதின் பயன் இறைவனே வணங்குதல் வேண்டும். இவ்வாறு கல்வி கற்றும் இறைவனே வணங்காமல் இருப்பின் கல்வி கற்றும் பயன் இல்லை என்று வள்ளுவப் பெருமானும் தாம் இயற்றிய குறட்பாவில் கடவுள் வாழ்த்தில் இரண்டாவது குறளிலேயே யாவரும் அறியும் வண்ணம்

**" கற்றதனால் ஆயபய னென்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ?**

என்று கூறியிருக்கின்றார். இதன் விளைவாக இறைவனுடைய திருநாமங்கள் நம்மனக்கண்முன் தோன்றுகிறது. இறைவனுடைய திருநாமங்களைக் கூறினால் போதாது. அதை திருஞானசம்பந்த சுவாமிகள் கூறியவாறு,

**காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது "**

இவ்வாறு ஓதினால் நல்லநெறிக்கு அழைத்துச்செல்லும் இறைவனுடைய திருநாமம் என்று கூறுகின்றார்.

இறைவனுடைய திருநாமத்தை நாமமாகவும், மந்திர மாகவும் ஓதப்பெறுவது ஒன்று உண்டு. அதுதான் 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தாகும். மந்திரம் என்பது மன்+ திரம்=மன்—நம்புதல், திரம்—காப்பாற்றுதல். ஆகவே மந்திரம் என்பது 'நம்பினவரைக் காப்பாற்றுதல்' என்பது பொரு ளாகும். மந்திரங்கள் பலவானாலும் 'பஞ்சாட்சர மந்திரம்' எல்லாவற்றிலும் சிறந்தது.

'நமசிவாய' என்ற மந்திரத்துக்கு 'சிவனுக்கு நமஸ்காரம்' என்று பொருள் கூறுவர்.

இதனுடைய தத்துவத்தையும் பொருளையும் மிக நுட்ப மாக ஆகமங்களும், திருமந்திரமும் கூறுகின்றன. 'நமசிவாய' என்ற திருவைந்தெழுத்தை மந்திரமாகக் கொள்வதுமல்லாமல் இறைவனுடைய திருநாமமாகவும் கொண்டு வழங்குதலையும் காண்க.

"மந்திரம் நமசிவாயவாக நீறணியப் பெற்றால்"

என்று திருநாமத்தை மந்திரமாகச் சொன்னார் நாவுக்கரசர். "'நமசிவாய' என்றுன்னடி பணியாப் பேயனாகிலும்" என்று சிவனுக்கு வணக்கமாக திருவாசகத்தில் மணிவாசகர் பாடி னார். இம்மந்திரத்தையே இறைவனுடைய திருநாமமாகக் கொண்டு வழங்குவதை சம்பந்தர் பாடிய நமசிவாயத் திருப் பதிகத்தில் உள்ள பாடல்கள் அனைத்திலும் 'நமசிவாய' என் பதை இறைவன் திரு நாமமாகப் பாடியுள்ளார்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
யோது வார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நம சிவாய வே.

இப்பாடலே அப்பதிகத்தின் முதல் பாட்டு ஆகும்.

இதையே நாவுக்கரசரும்,

"துஞ்சும் போழ்தும் நின் நாமத்திரு வெழுத்
தஞ்சும் தோன்ற அருளுமை யாறரே"

என்றும்,

"எந்தையார் திருநாமம் நமசிவாய
என்றெழு வார்க் கிது விசும்பில் இருக்கலாமே"

என்றும் கூறுகின்றார்.

**"ஆரா அமுதின் திருநாமம் அஞ்செழுத்தும்"**

என்று நக்கீர தேவரும், மந்திரத்தை திருநாமமாகக் கூறுவதையும் காணலாம்.

இறைவனுடைய திரு நாமங்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதும்போது அன்பர்களுக்கு இன்பம் உண்டாகும். 'நமசிவாய' என்னும் இறைவனுடைய திருநாமத்தை மந்திரமாக நினைப்பதற்குரியது, மந்திரத்தை மூன்று வகையாக உச்சரிப்பர். அவை மானஸம், மந்தம், வாசிகம் என்பனவாகும்.

மனத்துக் கண் தியானிக்கும் முறை மானஸம் என்றும் மெல்லப் பிறர் காதில் கேளாதபடி நாவை அசைத்து உச்சரித்தல் மந்தம் என்றும்,

இந்த மந்தமாக உச்சரித்தலை,

**"ஆறெழுத்து அடல்கிய அருமறைக் கேள்வி**
**நா இயல் மருங்கின் நவிலப் பாடி"**

என்று நக்கீரதேவரும் திருமுருகாற்றுப் படையில் ஓதி இருப்பதை நோக்கின் திருமுருகாற்றுப் படையையும் மந்தமாக உச்சரிக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

வாசிகம் என்பது வெளிப்படையாக ஓதுதல் ஆகும். மந்திரங்களை (வாசிகமாக)வெளிப்படையாக உச்சரிப்பதுசிறப்பு.

இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தரரும் பல தலந்தோரும் சென்று வணங்கிச் செல்லும்பொழுது திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் தலத்தை அடைந்து இறைவனை வணங்கிப் பல பாசுரங்களைப் பாடுகின்றார். அப்பாசுரங்களில் ஒரு பாட்டில் இறைவனிடம்,

**மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்**
**பெற்றலும் பிறந்தேன் இனி பிறவாத தன்மை வந்தெய்தினேன்**
**கற்றவர் தொழு தேத்தும் சீர்க் கரையூரிற் பாண்டி கொடுமுடி**
**நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் "நா" நமச்சிவாயவே"**

என்று கூறுகின்றார். இறைவா உன்னை நான் மறந்தாலும் என் 'நா' உன்னை 'நமச்சிவாய' என்று சொல்வதை மறவாது என்று கூறுகின்றார். இப்பாடலானது வள்ளுவர் இயற்றிய

பற்றுக பற்றற்ருன் பற்றினை; அப் பற்றைப்
பற்றுக பற்று விடற்கு என்ற குறளுக்கு விளக்கவுரை யாக வன்ருே இப்பாடல் விளங்குகின்றது.

அவ்வாறு இறைவனுடைய திருநாமத்தை கூறுகையில் நம்மை ஒரு துன்பமும் அணுகாது. சுந்தரப் பெருமாஞரும் கண் இழந்த போதும் இறைவனை மறவாமல்

வழுக்கி வீழினும் திரு பெயர் அல்லாம்
மற்று நான் அறியேன் மறு மாற்றம்

என்று கூறி துதிக்கின்ருர்.

அழும் போதும் வேலும் மயிலுமென்
பேனடியே னுடலும்
விழும் போதும் வேலு மயிலு மென்
பேன் செந்தில் ஆண்டவனே'

என்று செந்தில் கலம்பகத்திலும் கூறி இருப்பதைக் காண் கின்ருேம்.

ஔவை பிராட்டியும்

''சிவாயநம வென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை – உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்''

என்று கூறியுள்ளதையும் நோக்குக.

அன்பர்கள் எப்பொழுதும் இறைவனுடைய திருவைந் தெழுத்தை சொல்லி இன்புற வேண்டும்.

''நாமம்பரவி நமச்சிவாய வென்று மஞ்செழுத்தும் சாம் அன்று உரைக்கத்தருதி கண்டாய் துஞ்சும் போழ்தும் நின் நாமத்திரு வெழுத்தஞ்சம் தோன்ற -அருளும் ஐயாறரே'' என்று அப்பர் (நாவுக்கரசர்) வாக்கை சிந்தித்து திருவைந் தெழுத்தாகிய ''நமசிவாய'' என்னும் இறைவனுடைய திரு நாமத்தை ஓதி முத்தி அடைவோமாக !

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

*(கந்தர் அனுபூதி)*

# மணிவாசகரின் மாண்புறு உவமைகள்

வித்துவான். திரு. பி. ரா. நடராசன் அவர்கள்.

(முன் இதழ் 11–ன் தொடர்ச்சி)

**உவமை 25.**

'கண்கெட்ட ஊரேறு' (53)

**உ. பொ. நி.**

சீர்ஏ றடியார் நின்பாதம்
சேரக் கண்டும் கண்கெட்ட
ஊர்ஏ றாய்இங்(கு) உழல்வேனே
கொடியேன் உயிர்தான் உலவாதே,

**பொழிப்பு.**

சிறப்பு மிகுந்த அடியார்கள் உன் திருவடிகளை அடையும் படியான பெருமை மிகு செயலைக் கண்டும் யான் கண் பார்வையற்று ஊரினைச் சுற்றித்திரியும் பன்றியை யொத்தேன். அந்தோ! தீவினையாளனாகிய இக்கொடியேனின் உயிரும் இவ் வுடலை விட்டு நீங்கிற்றிலதே!

**விளக்கம்.**

பன்றி நல்லுணவை நீக்கிப் பகர ஈகாரத்தை உண்டு வாழும் தன்மைபோல யானும் அழிகாமத்தையே விழைந்து அழிந்தேன் என்கின்றார். 'யான்', 'எனது' என்னும் செருக்கு நீங்கி வாழவேண்டும். 'வேண்டாமை என்னும் செருக்கு' என்று பொய்யில் புலவரும் கூறுவர். அவ்வாழ்வே இவருள்ளிட்ட நால்வரின் நல்வாழ்வாம். இந்நிலை கொள்ளாது தன்னைத் தானே அளவில் மட்டும் குறைத்துப்பேசி அதனால் பணிவு காணுதல் என்பது குன்று முட்டிய குருவி போன்ற தாகும். இதனை விளக்க ஒன்று கூறுவன். சிவனாரின் திருவடிகளைக் காணச் சென்ற திருமால் 'தான்' என்ற செருக்கு நீங்காராய் அளவில் மட்டும் குறைத்துப்பேசும் பன்றியின் வேடத்தைக் கொண்டு கீழ்நோக்கிச் சென்றும் பெருமானின் திருவடிகளைக் காணும்பேறு பெற்றிலர். என்னை? அகத்தே செருக்கு நீங்காராய்ப் புறத்தே இழிநிலை கொண்டதால் என்க.

இச்செயலை நம் மணிமொழிப் பெருமானார் 'திருமாலும் பன்றி யாய்ச் சென்றுணராத் திருவடியை' (திருத்தெள்ளேணம் 1) எனக் கூறுவர். இதே போன்று தன்னைத் தானே குறைத்துப் பேசுதல் இத்தன்மையாய் அமையுமோ என்ற ஐயங் கொள் வார்க்குத் தம்மை விளக்குவாராய் ஊரேறு சுற்றித் திரிந்து வேண்டா என்று ஓதுக்கப்படும் பகர ஈகாரத்தை உண்டு வாழ்தலைத் தம்முடன் பெயர்த்தி 'ஊர்ஏறாய் இங்(கு) உழல் வேனோ' எனக்கூறினர். என்னே பெருமானின் தன்னடக் கம். இந்நிலை கொண்ட யான் வாளா உடலையும் வளர்த் தேனே! அந்தோ! என்று என் உடலை விட்டு உயிரானது நீங்கும்; அழியும் உடலை விட்டு என்று எனக்கு விடுதலை; என்று எப்போது யான் உன் திருவடி நிழலால் அமர்வது; அத்திருவடிகளில் வீழ்ந்து வணங்குவது என 'யானே பொய் என் நெஞ்சம் பொய் வினையேன் அழுதால் உன்னைப் பெற லாமே' எனக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அழும் பெரு மானின் நிலையினை எம்மொழியால் எழுதுவது. உடம்பிலி ருந்து உயிர் இன்னும் நீங்கவில்லையே என்பதனைப் பின்னும் பெருமானார் 'கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ' (செத்திலாப்பத்து 1) எனவும் கூறுவர்.

(தொடரும்)

# கடவுள் எங்கே?

**Thiru. G. Varatharajan Avl,** B. A,
Thiruvalluvar Nilayam,
32-B. Government Officers Colony
PUTHUR, TIRUCHIRAPALLI - 17.

---

உலகத்தைப் பார்க்கிறோம். உலகினைச் சுற்றிக் கடல் பரந்து கிடக்கிறது. காற்றும் விண்ணும் மேல் தளத்திலே இருக்கின்றன. விண்வெளியில் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் இருப்பதையும் காண்கிறோம். இவையெல்லாம் சேர்ந்து ஒரு அண்டம் என்பர். இதனைப்போன்று எத்தனையோ அண்டங்கள் உண்டு என்று சொல்லப்பெறுகிறது. "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம் அளப்பெருந் தன்மை வளப்பெருங் காட்சி" என்று அண்டப்பகுதியின் எழில்மிகு காட்சியினை வியக்கிறார் மாணிக்கவாசக அடிகள். இத்துணையும் ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு இயங்குவதைக் காண முடிகிறது. எப்படி ? நிலநடுக்கமும் நீர்ப்பெருக்கமும் உண்டாகுமாயின் என்ன ஆகும் என்று சிந்தித்துப்பாருங்கள். இப்பொழுதும்இவைஉண்டாகின்றன; ஆனால் எப்பொழுதும் உண்டாவதில்லை. இனி, விண்வெளியிலே உலவுகின்ற விண் மீன்கள் ஒன்றோடு ஒன்று மோதுமாயின் என்ன நிகழும்? சாதாரணமாக விண்வெளியிலே பறக்கின்ற வானவூர்திகள் ஒன்றோடு ஒன்று மோதுமாயின் எத்தனை பொருட்சேதம், உயிர்ச்சேதம் உண்டாகின்றன. அவ்வாறுள்ளபோது விண் வெளியிலே விண்மீன்களின் மோதல் எத்தனை பெரிய சேதத்தை உண்டு பண்ணும்? ஆதலின் இவ்வெழில்மிகு அண்டங்கள் நிலைதடுமாறாது ஒழுங்கே இயங்குவதற்கு ஒரு தலைவன் இன்றியமையாது வேண்டப்படுகிறது. சாதாரண மாக விண்வெளியில் செல்லும் வானவூர்திகள் ஒழுங்காக ஓடு

வதற்கு விமானிகள் இருக்கின்றார்களே! அங்ஙனமுள்ள பொழுது உலகத்துக்கு முதல்வன் உண்டு என்பதை தெள்ளி தின் உணரலாமன்றோ! ஆசிரியர் திருவள்ளுவர் 'உலகு ஆதி பகவன் முதற்றே' என்று ஆதிபகவனின் முதன்மையைக் கூறுகிறார். திருஞானசம்பந்தரும் திருமாற்பேறு ஈசனை, "ஆதியாகிய அண்ணல்" என்று பாடுகிறார்.

இனி, முதல்வனாகிய ஆதி பகவன் உலகத் தொகுதியை எவ்வாறு இயக்குகிறான்? அப்பெருமான் இருக்கின்ற இயல் பினை ஒரு அழகான உவமை வாயிலாக ஆசிரியர் திருவள்ளு வர் விளக்குகிறார். "எழுத்தெல்லாம் அகர முதல" என்பது அவரது திருவாக்கு. எழுத்துக்களுக் கெல்லாம் அகரமாகிய எழுத்து முதன்மையாக இருப்பது போன்று உலகத் தொகு திக்கெல்லாம் ஆதியாகிய பகவன் முதன்மையாக இருக் கின்றான் என்பது விளக்கம்.

அகரமாகிய எழுத்து இருகாரணங்கள் பற்றி முதன்மை இடம் பெறுகின்றது. தமிழ் எழுத்துக்கள், உயிர் எழுத்து பன்னிரண்டு, மெய்யெழுத்து பதினெட்டு, உயிர்மெய் யெழுத்து இரு நூற்றுப்பதினாறு, ஆய்த எழுத்து ஒன்று ஆக இருநூற்று நாற்பத்தேழாம். இவ்வெழுத்துக்களுக் கெல் லாம் முதல் எழுத்தாக இருப்பது ஒன்று. மற்றொன்று ஏனைய எழுத்துக்களோடு கலந்து அவற்றை இயக்குவது. மெய்யெழுத்தோடு அகரம் கலக்கவில்லையானால் ஒலிக்கவே முடியாதே. ஆகவே அகரம் தனித்தும் கலந்தும் இருந்து இயக்குகின்றது என்பதை அறிய முடிகிறது. இனி முதல் வன் உலகத்தொகுதிக்கு வேறாய் இருந்து கொண்டு இவற் றைப் படைத்துக் காத்து மறைக்கிறான்; இவற்றோடு கலந்து ஒழுங்காக நடைபெறவும் செய்கிறான். ஆகவே முதல்வன் தனித்தும் கலந்தும் இருக்கின்றான் என்பது உவமை வாயி லாகப் பெற்ற உண்மை. மேனாட்டு அறிஞர், "God is immanent or Transciudent என்று இவ்வியல் பினைக் கூறு கிறார். சந்தான குரவரில் முதலாவதாகவுள்ள மெய் கண் டார் இவ்வியல் பினை, 'அவையே தானேயாய்' என்று சுருக்கமாகக் கூறுகிறார். எல்லாப் பொருளோடும் கலந்து

அவையே யாயும், அவற்றின் வேருகத் தானேயாயும் இருக்கின்ருன் முதல்வன் என்பது விளக்கம். இனி விரித்து உயிர்களோடு உடனுய் அவையே தானேயாய் இருக்கிருன் என்று சிவஞான முனிவர் கூறுவர். அகர எழுத்து ஏனைய உயிரெழுத்துக்களோடு உடனுய் இருக்கின்றது என்று இவ்வியல்பினை உவமையிலும் பொருத்திக்கொள்ளலாம். சந்தான குரவரில் ஒருவராகிய உமாபதி சிவம் முதல்வனது இக்கல்பினை, 'அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து'' என்று நாயனுரின் அருள்மொழியைப் பொன்னே போல் போற்றி மொழிகிருர். திருஞான சம்பந்தரும், 'அகர முதலானை அணியாப்பனூரானை' என்று அணியாப்பூர் பெருமானை விளிக்கினுர். சமய குரவரும், சந்தான குரவரும் நாயனுர் அருள் வாக்கினைப் போற்றும் இயல்பைக் கண்டு மகிழ்வோமாக. இத்துணை கருத்துக்களையும் கொண்டுள்ளது நாயனுர் செய்த திருக்குறளின் முதற்பாடல்.

**''அகர முதல எழுத்தெல்லாமாதி**
**பகவன் முதற்றே உலகு''**

முதல்வன் உண்டு என்பதும் அவன் எங்கே இருந்து உலகத் தொகுதியினை' இயக்குகிருன் என்பதும் கூறப்பட்டது.

# செப்பேடுகள்

வித்துவான். திரு: வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
No. 16 பூசைப்படித்துறைத்தெரு, திருவையாறு
தஞ்சை மாவட்டம்.

---

நம் தமிழ் நாட்டின் வரலாற்றை ஆராய்ந்து அறியக் கல்வெட்டுக்களைப்போல, செப்பேடுகளும் ஆதாரங்களாகப் பயன்படுகின்றன. செப்பேடுகள் தாம்பிரசாசனம், தாம்பிரப்பட்டயம், செப்புப் பட்டயம் எனவும் வழங்கப்பெறும். செப்பேடுகளில் பெரும்பாலும் சமஸ்கிருதப்பகுதி முதலிலும், தமிழ்ப்பகுதி அதற்குப்பிறகும் குறிக்கப்பட்டிருக்கும். இவ்விரண்டில் தமிழ்ப்பகுதியே சிறந்தது. இதை ஒட்டியே சமஸ்கிருதப்பகுதி தயாரிக்கப்படும். எனினும் தமிழ்ப்பகுதியில் இல்லாத சில செய்திகள் வடமொழிப் பகுதியில் காணப்படுவதும் உண்டு.

செப்பேடுகளில் தானம் வழங்கிய மன்னனுடைய குலம், பெருமை, அவன் முன்னோரின் வீரச்செயல், புகழ் இவைகள் முதலில் கூறப்பட்டிருக்கும். பின்னர் ஓர் அதிகாரியின் விண்ணப்பத்தின் மீது மற்றோர் அதிகாரியை ஆணத்தியாகக் கொண்டு மன்னன் வழங்கிய தானம்; தானம் பெறுவோருடைய விவரம்; தானம் பெற்றவர் அரசனுக்கு எந்தெந்த வரிகளைச் செலுத்தவேண்டுவதில்லை; எந்தெந்த உரிமைகளை அநுபவிக்கலாம் எனக்கூறும் பரிகாரங்கள்; இறுதியில் அதிகாரிகளின் கையெழுத்துக்கள், காப்புரைகள், தானபத்திரம் எழுதியவர் பெயர், அதைச் செப்பேட்டில் செதுக்கியவரின் பெயர் இவைகள் குறிக்கப்பட்டிருக்கும். சிற்சில பட்டயங்களில் அரசனுடைய கையெழுத்தும் காணப்படும். தானம் வழங்கப்பட்ட பட்டயத்தைப் பெண்யானையின்மீது வைத்து, தானம் வழங்கப்பட்ட இடத்தின் எல்லையைச் சூழ்ந்துவரச்

செய்தலும் உண்டு. சிற்சில பட்டயங்களில் அரசனுடைய முத்திரையும் பொறிக்சப்பட்டிருக்கும்.

சோழ மன்னர்களுடைய ஆனை மங்கலம் செப்பேடு (The Large Leydon grants) திருவாலங்காட்டுச் செப்பேடு, கரந்தைத் தமிழ்ச் சங்கச் செப்பேடு* முதலியவைகள் தமிழிலேயே செதுக்கப்பட்டுள்ளன. பாண்டியர்களுடைய பழைய செப்பேடுகள் வட்டெழுத்தில் செதுக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை முதலில் செந்தமிழில் எழுதப் பட்டன. 'சீர்மிகுச் செப்பேட்டுக்குச் செந்தமிழ்ப் பாத் தொடுத்தோன்' என்ற பாண்டியர் சாசனத் தொடரே போதிய சான்றாகும். பல்லவர்களுடைய பழைய சாசனங்கள் ஆந்திர நாட்டிலிருந்து கிடைத்துள்ளன. அவைகளுள் மூன்று செப்பேடுகள் பிராகிருத மொழியிலும் மற்றவை சமஸ்கிருத மொழியிலும் அமைந்தவை. பல்லவர்களுடைய செப்பேட்டுச் சாசனங்கள் தமிழ் நாட்டில் கிடைத்தனவற்றிற்கும் ஆந்திர நாட்டில் கிடைத்தனவற்றிற்கும் வேறுபாடுகள் உண்டு.

செப்பேடுகளில் எழுத்துக்கள் முதல் ஏடும் கடைசி ஏடும் உட்புறம் மட்டுமே செதுக்கப்பட்டிருக்கும். இதனால் எழுதப்பட்ட பகுதிகள் தேய்ந்து பழுதுறாது இருத்தற்கு இவ்வாறு எழுதப்பட்டதாகும். கடைசிப் பக்கம் எழுதியிருந்தால், அதற்குப் பிறகு வெற்று ஏடு இருக்கும்.

இது காறு கல்வெட்டுத் துறையினர் வெளியிட்ட செப்பேடுகளில் சூயே விகாரத்திலிருந்து கிடைத்த கனிஷ்க மன்னன் காலத்துச் செப்பேடே மிகப் பெரியது. அது இரண்டரை அடிச் சதுரம் உள்ளது. உத்திரப் பிரதேசத்தில் கோரக்பூர் சில்லாவில் சோகௌரா என்னும் இடத்திலிருந்து கிடைத்த செப்பேடே மிகவும் சிறிய அளவுள்ளது. அது

*சென்னை ஆளுநராக இருந்த மேன்மை தங்கிய பிரகாசா அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு எழுந்தருளிய பொழுது, அங்கு வைக்கப் பட்டிருந்த இச் செப்பேட்டின் ஆராய்ச்சி உரை அடங்கிய மூலம், தமிழன்பரும், வரலாற்று உணர்ச்சியுடையாருமாகிய திரு. நீ. கந்தசாமிப் பிள்ளையின் விருப்பப்படி முதல் முதல் என்னால் படித்து எழுதப்பட்டதாகும்.

$2\frac{1}{2}$ அங்குலம் நீளமும் $1\frac{3}{4}$ அங்குலம் அகலமும் கொண்ட ஏட்டில் எழுதப்பட்டது.

இச் செப்பேடுகளில் **வேள்விக்குடிச் செப்பேட்டின்** தமிழ்ப் பகுதியில் கண்ட ஆய்வுரைகளை ஈண்டு எழுதுகின்றேன்.

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டைக் *கி. பி. 765 முதல் கி. பி 790 வரை ஈடும் எடுப்பு மின்றி ஆண்ட மன்னன் நெடுஞ்சடையன் பராந்தகன் ஆவன். இம்மன்னனது முன்னோனை பல்யாக முது குடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியன், கொற்கை கிழான் நற்கொற்றனுக்கு வழங்கியருளிய வேள்விக்குடி என்னும் ஊரை, **களப்பிரன்** என்னும் கலியரசன் தன் ஆட்சியில் கவர்ந்து கொண்டான். அக்கொற்கை கிழான் நற்கொற்றன் வழியில் தோன்றிய நற்சிங்கன் என்பான், நெடுஞ் சடையன் பராந்தகனிடம் வேள்விக்குடி தன்னுடைய பழமையாதலைக் காட்டிவேண்டிக் கொண்டவாறு, அவ்வூரைப் பெருநான்கு எல்லைகளுடன் அவனுக்கு, இம் மன்னன் மீளவும் வழங்கியருளியதை உணர்த்துகின்றன இச்செப்பேடுகள்.

இவைகள் பிரிட்டிஷ் பொருட் காட்சிச் சாலையில் இருக்கின்றன. இவை பத்து ஏடுகளில் அமைக்கப்பட்டுள்ளன. இவைகளுள் முதல் ஏழு ஏடுகளில் இடது பக்கங்களில் எண்கள் இடப்பெற்றும், முதல் ஏட்டிலும் இறுதி ஏட்டிலும் ஒவ்வொரு பக்கமே எழுதப்பெற்றும் இருக்கின்றன. செப்பேடுகளில் வடமொழிப் பகுதியும் தமிழ்ப் பகுதியும் இருக்கின்றன. ஒன்று முதல் முப்பது வரிகளில் வடமொழியின் முதற் பகுதியையும் நூற்று நாற்பத்திரண்டு முதல் நூற்றைம்பது வரையுள்ள வரிகளில் வடமொழியின் இரண்டாவது பகுதியையும் காணலாம். தமிழ்ப் பகுதியிலும் சிலவட சொற்கள் கலந்துள்ளன. வடமொழிப் பகுதி கிரந்த எழுத்தில் வரையப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதி வட்டெழுத்தில் செதுக்கப்பட்டுள்ளது. சில இடங்களைத் தவிர மற்ற இடங்

*இம்மன்னனது ஆட்சிக் காலம் கி. பி. 765 முதல் கி. பி. 815 வரை என்பர் ஸ்ரீK. A. நீலகண்ட சாஸ்திரியார். (The Pandyan Kingdom, P. 41).

களில் எல்லாம் மெய்யெழுத்துக்களில் புள்ளிகள் இடப்பட்டுள்ளன. செப்பேட்டில் முத்திரை ஒன்றுமில்லை. ஏடுகளைக் கோத்திருந்த வளையம் வெட்டப்பட்டிருக்கின்றது.

இச் செப்பேடுகளைத் திருவாளர் H. கிருஷ்ண சாஸ்திரியார், B. A. இந்தியா தேசத்துக் கல்வெட்டுத் தொகுதி 17, 291—309 பக்கங்களில் 1923—24 ஆண்டில், எழுத்து மாற்று முறையில் ஆங்கில எழுத்தில் வெளியிட்டிருக்கின்றனர்.

இச் செப்பேட்டுச் சாசனத்திற்கு ஆணத்தி தந்தவன் கரவந்தபுரத்து மூவேந்த மங்கலப் பேரரையனாகிய வைத்திய சிகாமணி மாறங்காரி ஆவன். மாறன்காரி என்பது மாறன் மகன் காரி எனப் பொருள்படும்.

இச்செப்பேடுகளில் தமிழ்ப் பிரசஸ்தி பெரும்பாலும் கலி முதலியவற்றின் ஓசையாலும் சொற்சீர் அடிகளாலும் அமைந்துள்ளது. இதைப்பாடினவர் சேனாபதி ஏனாதி ஆயின சாத்தஞ்சாத்தன் ஆவர். இவனுக்கு நான்கு படாகாரம் அளவுள்ளநிலம் கொடுக்கப்பட்டது. இத்தாம்பிர சாசனத்தை எழுதியவன் சித்தகேசரிப் பெரும்பணைக்காரணி. இவனுக்குப் பெருமக்கள் ஒரு இல்லமும் இரண்டுமாச்செய்யும், ஒருமா புன்செய்யும் வழங்கியுள்ளனர்.

இத்தமிழ்ப் பிரசஸ்தி பல்லாற்றானும் பழமையும் சிறப்பும் உடையது. இது இல்லையானால் கி. பி. 765க்கு முன் ஆண்ட பாண்டிய மன்னர்களையும் அவர்களுடைய போர்ச்செயல் களையும், பிறவற்றையும் நாம் அறிந்து கொள்ளவே இயலாது.

இத்தமிழ்ப் பிரசஸ்தியால் அறியப்பட்ட அரசர்களும் அவர்களின் வரலாறுகளும்;—

### 1. கடுங்கோன்

இம்மன்னன், உலகிலுள்ள இருளை நீக்க, கதிரவன் உதித்ததுபோல உலகிலுள்ள அநீதியை நீக்கும் பொருட்டுத் தோன்றியவன் ஆவன். இவன் களப்பிரன் என்னும் கலியரசனை வென்று மீண்டும் பாண்டியர் ஆட்சியை நிறுவினான். இவன் செங்கோல் செலுத்தி, புகழோடு வாழ்ந்துவந்தான்.

## 2. அவனி சூளாமணி

இவன் கடுங்கோன் என்னும் பாண்டியனது மகன். மாறவர்மன் என்னும் பட்டம் புனைந்தவன். எந்தக் காலத்தில் அழைத்தாலும் ஓடிவரக்கூடிய கடல்போன்ற படையை உடையவன். எட்டுவகைச் செல்வங்களுக்கும் தலைவன்.

## 3. சேந்தன்

இவன் அவனி சூளாமணியின் மைந்தன். கொடுங்கோல் அரசர்களால் ஏற்பட்ட துன்பங்களைத் துடைத்தவன். தன்னுடைய வெற்றிச்செயல்களை மலைகளில் பொறித்து வைத்தவன். செங்கோற் சேந்தன் என்று பாராட்டப் பட்டவன். இவன் வானவன் என்ற பட்டப்பெயரைப் பூண்டிருந்தான். இதனால் இவன் சேரமன்னரை வென்றவன் ஆதல் வேண்டும்.

## 4. அரிகேசரி மாறவர்மன்

இவன் சேந்தன் என்பவனுடை சேய். பெரிய சின்னமனூர்ச் செப்பேடுகளில் அரிகேசரி பராங்குசன் என்று கூறப் பெற்றுள்ளான். முகபடாமணிந்த யானைகளைச் செலுத்திப் **பாழி** என்ற இடத்தில் போர்புரிந்தான். வில்லேந்திய படைஞர் வேலியாகச் சூழ்ந்து நின்ற நெல்வேலிப் போரில் வென்றான். பரவரைப் பாழ்படுத்தினான். குறுநாட்டவர் குலங்கெடுத்தான். செந்நிலத்துச் செருவென்றான். கேரளனைப் பல முறைத் தோல்வியுறச்செய்து அவனுடைய உரிமைச் சுற்றம், குதிரை, யானை இவைகளைக் கைக்கொண்டான். உறையூரில் தங்கிக்கொண்டு ஒரேநாளில் புலியூரை வென்றான். வேலாழி, பறம்பு என்ற இவ்வூர்களை அழித்தான்.

இரணிய கர்ப்பம், துலாபாரம் என்னும் தானங்களைச் செய்தான். இவன் அசமசமன் என்று சிறப்பிக்கப்படுகின்றான்.

## 5. கோச்சடையன்

இவன் அரிகேசரி மாறவர்மனின் மகன். ஆய்வேளையும் அவனது கடல்போன்ற தானையையும் திருப்புடை மருதூரில் வென்றான். மங்கலபுரம் என்னும் ஊரில் மாரதரை எறிந்

தழித்தான். தென்னன், வானவன், செம்பியன், சோழன், மன்னர்மன்னன், மதுர கருநாடகன், கொங்கர்கோமான் என இவன் பாராட்டப்படுகின்றான்.

### 6. மாறன்

இவன் கோச்சடையன் புதல்வன். மாறவர்மன் இராச சிம்மன் என்று கூறப்பட்டவனும் இவனேயாவன். நெடு வயல், குறுமடை, மண்ணிக்குறிச்சி, திருமங்கை என்னும் இடங்களில் பகைவர்களை எதிர்த்து மீளவும் அவர்களைப் பூவ லூரில் தோல்வியுறச் செய்தான். கொடும்பாளூரில் யானை, குதிரைகளைக் கைப்பற்றினான். பல்லவ அரசனைக் குழும்பூரில் ஒளி குன்றச்செய்தான். அவனுடைய பரிகளையும் கரிகளையும் கைக்கொண்டு பெரியலூரில் புறங்காட்டி ஓடச்செய்தான். மழகொங்கத்தைத் தன்னடிப் படுத்தினான். பாண்டிக் கொடிமுடி சென்று பசுபதியது பதுமபாதத்தைப் பணிந்து ஏத்தினான். பொற்குவியல்களையும் இரத்தினங்களையும் அப் பெருமானுக்கு மனம் மகிழக் கொடுத்தான். கங்க அரசனோடு சம்பந்தஞ்செய்தான்.

எண்ணிறந்த பசுக்களைத் தானஞ்செய்தான். இரணிய கர்ப்பம், துலாபாரம் என்னும் தானங்களைப் புரிந்தான்.


### 7. நெடுஞ்சடையன் பராந்தகன்.

இவன் மாறவர்மன் இராச சிம்மனது மகன். இவன் பல்லவனைக் காவிரியின் தென் கரையில் உள்ள பெண்ணை கடம் என்னும் ஊரில் தோற்றோடச் செய்தான். ஆய் வேளையும் குறும்பரையும் அமருள் அழித்து ஓட்டினான். இவன் சிரீவரன், சிரீமனோகரன், சினச் சோழியன், புனப் பூழியன் முதலான பட்டப் பெயர்களைத் தரித்திருந்தான். இம்மன்னன்தான் கொற்கை கிழான் நற்கொற்றன் வழியில் வந்த நற்சிங்கனுக்கு அவன் வேண்டுகோளின்படி வேள்விக் குடியை மீளவும் கொடுத்தருளியவன்.

**வேள்விக் குடியின் நான்கெல்லை,**

நகரூர் எல்லைக்கு மேற்கு, களந்தைக் குளத்தில் ஆலுக்கு வடக்கு, கொள்ளன்புத்தூருக்கும், இருப்பைச் செய்யிடை

மேற்றலைப் பொருப்பிற்கும் கிழக்கு, வட பாலைப் பொருப்பிற்குத் தெற்கு இவ்விசைந்த பெரு நான் கெல்லைக்குட்பட்டது வேள்விக்குடி என்னும் ஊர்.




**இச் செப்பேடுகளில் குறிக்கப்பெற்ற நாடுகளும் ஊர்களும்.**

பாகனூர்க் கூற்றம் :– மதுரைக்கு அருகில் உள்ள சோழவந்தான் இக் கூற்றத்தைச் சேர்ந்த ஊர்களில் ஒன்று என்று கல்வெட்டு ஒன்று அறிவிக்கின்றது* எனவே இச் சோழ வந்தானைச் சேர்ந்த பிரதேசம் இக் கூற்றம் என்று கொள்ளலாம். கூற்றம் என்பது இருநாடுகளுக்கு உட்பட்ட ஒரு சிறு பிரிவு.

மழநாடு- இது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் காவிரிக்கு வடகரைப் பகுதியாய் உள்ளது. திருப்பாச்சிலாச்சிரமம் இம் மழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்று. இம் மழநாடு முதலாம் இராச ராசன் காலத்தில் இராசாசர்ய வளநாடு எனப் பெயர் பெற்றது.

*Epigraphical Collection for 1910 No. 127,

இம்மழநாட்டின் சிறப்பினைச் சேக்கிழார் பெருமான்.,

**"செங்கமலப் பொதிய விழச் சேல்பாயும் வயல் சேறுமாறுப் பொங்கொலி நீர் மழ நாடு"**

எனக் குறித்துள்ளனர்.

**குறுநாடு** - இதுபொழுது தெரிந்திலது.

நகரூர், கொற்றன்புத்தூர், பாயல் இவைகள் வேள்விக் குடியைச் சுற்றியுள்ள ஊர்கள். கொற்கை-திருநெல்வேலி ஜில்லாவில் பாண்டியர்களுடைய பழைய இராசதானியும் கடற்றுறைப் பட்டினமும் ஆகும். நெல்வேலி, செந்நிலம், மருதூர் மங்கலபுரம், நெடு வயல், குறுமடை, மண்ணிக் குறிச்சி, திருமங்கை, பூவலூர், செங்குடி, புதான்கோடு, கொடும்பாளூர், குழும்பூர், கோழி, பெரியலூர், பாண்டிக் கொடிமுடி, பெண்ணுகடம், கரவந்தபுரம், வெண்பை, இவ் வூர்களும் குறிக்கப்பட்டுள்ளன. இவைகளுள் மருதூர் திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள திருப்புடை மருதூர் ஆகும். மங்கலபுரம் *என்பது மங் களூர். கொடும்பாளூர் புதுக்கோட்டை இராச்சியத்தில் உள்ளது. பாண்டிக்கொடி முடி என்பது கொடிமுடியாகும். இது கரூர்க்கு அருகில் உள்ளது. கொங்கு நாட்டுத் தேவா ரம் பெற்றதலங்களுள் இது ஒன்று. கோழி என்பது உறை யூர். பெண்ணுகடம் தஞ்சாவூர்க் கூற்றத்தில் காவிரியின் தென்கரையில் இருந்ததாகத் தஞ்சாவூர் ஜில்லா திருவிசலூர் கல்வெட்டு அறிவிக்கின்றது. கரவந்தபுரம் என்பது திருநெல் வேலி ஜில்லாவில் உள்ள களக்குடி.

இச்செப்பேட்டில் வந்த காப்புரை—

**இதுகாத்தார் மலரடி என்முடி மேலன.**

---

*[நாட்டுக் குறும்பு— குறும்பு நாடு. இது கொங்கு நாட்டின் 24பிரிவு களில்ஒன்று. கோயம்புத்தூர் ஜில்லா திருப்பூரைச் சேர்த்தது இந்நாடு.]*

*மங்கலபுரம் - திருச்சி ஜில்லாவில் கொள்ளிடத்திற்கு வடகரையில் உள்ள மங்கலம் என்னும் ஊர் ஆகும் என்பர். T. V. சதாசிவ பண் டாரத்தார்.*

**வேள்விக்குடியில் உள்ள நிலம் பிரிக்கப்பட்டவிதம்**

வேள்விக்குடியைப் பிரமதேயமாகப்பெற்ற காமக்காணி நற்சிங்கன், சுவரஞ்சிங்கன் என்றும் கூறப்பெறுகின்றான். இவன் இவ்வூர் நிலத்தை மூன்றாகப் பகுத்து அதில் ஒரு பங்கைத் தனக்கு வைத்துக்கொண்டு, ஏனைய இரண்டு பங்குகளை அந்தணர்கள் ஐம்பதின்மர்க்குக் கொடுத்தான். இச்சுவரஞ் சிங்கன் தனக்கு வைத்துக்கொண்ட ஒருபங்கில், தன்தம்பி மார்களுக்கு நான்கு படாகாரங்களையும், தன் சிற்றப்பனார் மக்களுக்கு ஆறு படாகாரங்களையும் கொடுத்துள்ளான். இவ்வூரில் மூர்த்தி எயினனுக்கு நான்கு படாகாரங்கள் உண்டு. இந்நிலப்பகுதிகள் இவ்வூர்ச் சபையைச் சேராதனவாகும்.

படாகாரம் என்பது பாண்டிய நாட்டில் அக்காலத்தில் வழங்கி வந்த நில அளவைக் குறிப்பதாகும்.

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால் நிறுவப்பெற்ற

# கந்த புராண நிதிச் சார்பில்

கீலக ஆண்டு ஐப்பசித் திங்கள் 1-ம் நாள் 17—10—68உ

வியாழக்கிழமை

சிதம்பரம் ஸ்ரீ சபா நாயகர் கோவில் – ஸ்ரீ பாண்டில் நாயகம் கோவிலில் நடைபெற்ற

# கந்தபுராண படன நிறைவு விழாவில்

வாசித்துக் கொடுத்த சூரசம்மார சுருக்கக் கீர்த்தனே.

**இராகம்:** சண்முகப் பிரியா :: **தாளம்:** ஆதிதாளம்

### பல்லவி

கந்தா கடம்பா காத்தருள்வாய்

### அநுபல்லவி

எந்தாய் ஓம் மறைப் பொருள் இனியாய் தந் தைக்குபதேசம்
தந்தாய் ஓங் காரருபன் தனதுணே வள்ளிகொண்ட — கந்தா

### சரணம்

1. திருக்கயி லாயமலே செம்மலின் அருள்பூண்டு
திருந்திய தம்பிமார் ஒன்பதின் மரைக்கொண்டு
தருக்குடைத் தாரகன் தனேமலே யொடுகீண்டு
தன்னுடன் வருபவர் பலதலம் காட்டக்கண்டு
அருமறை ஒலிவிண்ட தில்லேச்சிற் றம்பலத்து
அத்தன் பதமதனே அருளொடு நின்றுகண்டு
திருச் சேய்ஞ லூரிரா மதவன் பூ சனேசெய்து
செந்தில்மா நகர்புக்குத் தூதுசூர் காணவிட்ட —கந்தா

2. பாசறை ஏமகூடம் பரிசன மொடுதங்கிப்
பாநுகோ பன்முதல் சூர்மகார் உயிர்வாங்கி
ஆசைகொள் சிங்கன்சூர்முன் அறவுரை சொல்லிஏங்கி
அடியிணை சேரப்போர் செய் அவனுயிர் வடிவேல்வாங்கி
நேசமில் சூரன்பத்மன் சேருடல் இரு கூறுக்கி
நின்றிடு மயில்கோழி வாகனம் கொடியாக்கித்
தேசம் புகழத்தேவர் சிறைநீக்கிப் பரங்குன்றில்
தெய்வயானை மனங்கொண்டு தேவசேனு பதியாகும்

—கந்தா

23, தேரடி கடைத் தெரு,
சிதம்பரம்
17—10—68.

இங்ஙனம்,
ஆ. சு. கணபதிப் பிள்ளை,
தில்லைத் திருமுறைக் கழகம்.

---

## ‘பொன் மொழிகள்’

| | |
|---|---|
| “ஏழ்மையிலும் | நேர்மை |
| கோபத்திலும் | பொறுமை |
| தோல்வியிலும் | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | பரோபகாரம் |
| துன்பத்திலும் | தைரியம் |
| செல்வத்திலும் | எளிமை |
| பதவியிலும் | பணிவு.” |

[மேற்கண்ட குணங்கள் ஒவ்வொருவரிடமும் அவசியம் இருக்கவேண்டும்.]

திரு சி. குமாரஸ்வாமி அவர்கள்,
28. கவரைத்தெரு.
நத்தம் (P. O.) செங்கற்பட்டு.

# 'ஒரு பூ'

திரு. சி. குமாரஸ்வாமி அவர்கள்,
28, கவரைத் தெரு,
நத்தம் (Post) செங்கல்பட்டு.

---

பூவில் சிறந்தது மல்லிகை. மிக்க மணமுள்ளது. அது போல், ஒருசிறந்த பூமாலைதொடுத்து நம் செந்தமிழ்க்கடவுள் கந்தப்பெருமானுக்குச் சூட்டி மகிழ்ந்தார் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள். நம்மையும், மகிழ்ந்து பேரின்பம் அடையச் செய்துள்ளார். அதுதான் செஞ்சொற்புனைமாலை. கந்தரநுபூதி!

இந்த மாலையில், நாகாசலத்தைமட்டும் (திருச்செங்கோடு மட்டும் வெளிப்படையாகப்பாடியது) ஒரு பூவாகத் தொடுத்துள்ளார். (க. அநுபூதி 11). ஆனால், ஆறுபடை வீடுகளையும் உள்ளடக்கி ஒரு பூவையும் வைத்துள்ளார். அந்தப்பூ (மாலையில் தொடுக்கப்பட்ட) இரண்டாவது பூ. ஞானப்பூ. அதன் விளக்கம் இதோ;—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | உல்லாசம் | = | திருப்பரங்குன்றம் | = | மூலாதாரம் |
| 2) | நிராகுலம் | = | திருச்செந்தூர் | = | சுவாதிஷ்டானம் |
| 3) | யோகம் | = | பழநி | = | மணிபூரகம் |
| 4) | இதம் | = | திருவேரகம் | = | அநாகதம் |
| 5) | சல்லாபம் | = | குன்றுதோராடல் | = | விசுத்தி |
| 6) | விநோதம் | = | பழமுதிர்சோலை | = | ஆஞ்ஞை. |

ஐம்பத்தோரு (51) பூக்களைக் கொண்ட பூ மாலையில் இது மிகச்சிறந்த ஞானப்பூ.

நாம் எக்காரியத்தைச் செய்தாலும் ஆண்டவனை வழிபட்டுச் செய்யவேண்டும். இதை அபிராமி அந்தாதிபாடியருளிய அபிராமிபட்டர், திருக்கடவூர் கள்ளவிநாயகப் பெருமானிடம் வேண்டுகிறார். அது இதோ;—

**உண்ணும்பொழுதும் உறங்கும்பொழுதும் ஒருதொழிலைப்**
**பண்ணும்பொழுதும் பகரும்பொழுதும் நின்பாதத்திலே**
**நண்ணும் கருத்துத் தமியேனுக்கென்றைக்கு நல்குவையோ?**
**விண்ணும் புகழ்க்கடலூர்வாழும் கள்ளவிநாயகனே!**

கடவுளை வழிபடக் கோயிலுக்குச் செல்லும்போதும், பெரியோர்களைக் காணச் செல்லுகையிலும், குழந்தைகளைப் பார்க்கப் போகும்போதும் வெறுங்கையுடன் செல்லலாகாது. பூவோ, பழங்களோ கொண்டு சென்று, கொடுத்து மகிழ வேண்டும். இது ஆன்றோர் அருள்மொழி.

கடவுளை எப்படி வழிபடுவது? உள்ளன்போடு வழிபட வேண்டும். 'அன்பேசிவம்', அல்லவா? வசதி படைத்தோர், திருவிழா நடத்திவைக்கலாம். அபிஷேகம் செய்து மகிழலாம். அது முடியாதவர்கள் அர்ச்சனை செய்து (ஆண்டவனின் திரு நாமங்களைச்சொல்லி) வழிபடலாம். அதுவும் இயலாதவர்கள் ஆண்டவன் திருவடிகளிலே ஒருபூவைவைத்து வணங்கலாம். அந்தப்பூவையும் காசுகொடுத்து வாங்க முடியாத அன்பர்கள் ஸ்ரீ அருணகிரிநாதரின், கந்தரநுபூதியாகிய செஞ்சொற்புனை மாலையைச்சூட்டி வழிபட்டு மகிழலாம். அதற்கும் நேரமில் லாத அன்பர்கள் அந்த மாலையில் உள்ள ஒரு பூவை மட்டும் சூட்டி மகிழ்ந்து முருகனின் அருள்பெறலாம். அந்தமாலையில் சிறந்த பூ இதுதான்;— (கந்தரநுபூதி – 2)

**உல்லாச நிராகுல யோக விதச்**
**சல்லாப விநோதனும் நீ அலையோ**
**எல்லாம் அற என்னை இழந்த நலம்**
**சொல்லாய் முருகா ! சுரபூபதியே !!** *(கந்தரநுபூதி)*

இந்த ஒரு பூவால் வழிபட்டால், (1) மனக்களிப்பு (2) கலக்க மின்மை, (3) இன்பம் ( சிவயோகம் ) (4) நன்மை (உபதேசம்) (5) அளவளாவுதல், (6) ஞானம் (அருள்) ஆகிய ஆறையும் ஆறுமுகப் பெருமான் நமக்கு அருள்வான். ஆகவே, அன்பர்கள் கூடியவரை கந்தர் அநுபூதி பூராவையும் தினமும் பாராயணம் செய்வது மிகவும் நலம். நம் குழந்தைகளையும் பாராயணம் செய்யுமாறு தூண்டி அவர்களும் உய்யும் வழிகாட்டுவது நமது கடமை.

**வாழ்க முருகன் அடியார்கள்!**
**வளர்க குமரகுருபரன் !**
**முருகா சரணம் !**

# காலக் கணிதம்

திரு. A. இராசமாணிக்கம் அவர்கள்,
உதவி ஆசிரியர்,
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர்தொடக்கப்பள்ளி,
திருப்பனந்தாள்.

---

(மலர் 19 இதழ் 11ன் தொடர்ச்சி)

**இதழ் 7.**

**முன்குறிப்பு:**

முன் 6ஆம் இதழில் யோகினி, இராசிஇருப்பு, சுதேச இராசிமானம் கணக்கிடல், அகஸின்பேதம் முதலியனபற்றி விவரிக்கப்பட்டன. இனிக்கூறப்போவன யாவும் பஞ்சாங்கத்தின் உள் விஷயமாக இருப்பனவும், மிக ரகஸியமானதுமான கணிதங்களாகும். இவை இருப்புப் பெட்டியைத் திறந்து பார்ப்பது போன்று கவனிக்க வேண்டுவனவாகும். அவ்விஷயங்களில் அயனும்ஸம், சூரியஅயனம், பஞ்சாங்க சூரியபுடம் என்பனவற்றை மாத்திரம் எடுத்துக் கொள்வோம்.

**அயனும்ஸம் :-**

அயனும்ஸமாவது யுகாரம்பம் தொடங்கி நக்ஷத்திர மண்டலமானது கிரமமாக 27 பாகைகள் மேற்காகச்சென்று பின்னும் பழைய ஸ்தானத்தை யடைந்து கிழக்காக 27 பாகைகள் சென்று மறுபடியும் பூர்வஸ்தானத்தைச் சேருகிறது. இவ்விதம் ஒருதடவை சேருகிற காலம் ஒரு மண்டலம். ஒரு மகாயுகமாகிய 43,20,000 வருஷங்களில் 600 மண்டலங்கள் இவ்விதம் வருகின்றன.

இவ்விதமாகிய அயனும்ஸம் கணக்கிடுவது எவ்விதமோவெனின் கலியுக சகாப்த வருஷத்தில் 3600ஐக் கழித்து மீதியை 3ஆல் பெருக்கி வந்த பலத்தை 200ஆல் வகுக்க

வரும் ஈவு பாகைகள். மீதியை 60ஆல் பெருக்கி 200ஆல் வகுக்கவரும் ஈவு கலைகள். இதையே அவ்வருஷ அயனும்ஸம் என்பர்.

உதாரணமாக இந்த 5069 கலிக வருஷத்துக்குக் கணிப் போம். $5069 - 3600 = 1469$. இதை 3ஆல் பெருக்க $1469 \times 3 = 4407$. இதை 200ஆல் வகுக்க $4407 \div 200 =$ 22 ஈவு; மீதி 7. மீதியை 60ஆல் பெருக்க $7 \times 60 = 420$. இதை 200ஆல் வகுக்க $420 \div 200 = 2$ ஈவு; மீதி 20. அதாவது அயனும்ஸம் 22 பாகை, $2\frac{1}{10}$ கலையாகிறது.

**சூரிய அயனம்:**

சூரிய அயனம்: மேஷாயனம்,ரிஷபாயனம்,மிதுனயனம், கடகாயனம், சிம்மாயனம், கன்னியாயனம்,துலாயனம், விருச் சிகாயனம். சாபாயனம், மகராயனம், கும்பாயனம். மீனு யனம் என்று பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு மாதமும் 8உ அல் லது 9உ குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு மாதமும் 8உ முதல் 3 நாளைக்கு வெவ்வேருகப் பஞ்சாங்க சூரியபுடம் செய்யப்படுகிறது. அயனபுடம் 19 பாகை முதல் 22 பாகை வரையில் உள்ள 3 பாகை வித்தியாசத்தை 200 ஆண்டுகளுக்குக் கணக்காய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. எப் போதும் சூரிய புடத்தில் அயனபுடம் சேர்த்தலானது எந்த தேதியின் சூரிய புடத்துடன் கூட்டிஞல் பாகை பூச்சிய மாகுமோ அன்றைய சூரிய புடத்துடன் கூட்டி வந்த கலை விகலைகளை நாழிகை விஞடியாக வைத்து, 60ல் கழித்து வந்த மீதி நாழிகை விஞடியில் அடுத்துவரும் மாத அயனம் பிறந்து விடுகிறது.

**பஞ்சாங்க சூரியபுடம்:-**

கலிசுத்த தினத்தால் கிரக கணிதங்கள் கணிக்கும் விதத் தினைப் பின்னர் விவரமாகக் காண்போம். இப்போது பஞ் சாங்கத்தில் கணித்துள்ளபடி சூரியன் 30 பாகையையுடைய ஒரு இராசியில் ஒரு மாதம் சஞ்சரித்து மறுமாதம் அடுத்த இராசிக்குச் சென்று விடுகிறது என்பது நாம் அறிந்ததே. இவ்விதம் மேடாதி சென்ற மாதங்களை இராசியாகவும் சென்ற தேதியைப் பாகையாகவும் வைத்துக்கொள்வது கிரியாகும்.

மாதம் பிறந்த நாழிகை விஞடிகளை இராசி மண்டல தூரத்தின் கலை விகலைகளாகக் கொள்ளுதல் வேண்டும். இராசி மண்டலதூர அளவுகளாவன : 60 விகலை 1 கலை; 60 கலை 1 பாகை; 30 பாகை ஒரு இராசி; 12 இராசி ஒரு மண்டலம் எனக்கொள்வதாம்.

மாதம் பிறந்த நாழிகை விஞடிகளை மாதம் இரவில் பிறந்திருந்தால், சென்ற மாத தின பிரமாணமாகிய 60 நாழிகையில் கழிந்து சேடத்தைக் கிரியின் கீழ் வைத்துக் கூட்ட வேண்டும். மாதம் பகலில் பிறந்திருந்தால் மாதப்பிறப்பின் நாழிகை விஞடிகளாகிய கலை விகலைகளைக் கிரியில் கழித்து விடுதல் வேண்டும். இவ்விதம் செய்து வந்தது ரவிமகமாகும்.

இந்த ரவி மகத்தில் ஒவ்வொரு மாதத்திற்கும் கூறப்பட்டுள்ள யோக்கியாதி கலைகளை எந்தத் தேதிக்கு வேண்டுமோ அந்தத் தேதிக்குக் கணக்கிட்டுப் பங்குனி மாதம் முதல் புரட்டாசி மாதம் முடிய உள்ள மாதங்களாயின் அவ்விதம் கணக்கிட்ட யோக்கியாதி கலைகளை ரவி மகத்தில் கழித்தல் வேண்டும். ஐப்பசி மாதம் முதல் மாசி மாதம் முடிய உள்ள மாதங்களாயின் அந்த யோக்கியாதி கலைகளை ரவி மகத்தில் கூட்டுதல் வேண்டும். இவ்விதம் செய்து வந்தது பஞ்சாங்க சூரிய புடமாம்.

**யோக்கியாதி கலை விபரம்:-**

யோக்கியாதி கலையாவது ஒவ்வொரு மாதத்திற்கும் உள்ள நான்கு வாரத்திலும் வாரம் ஒன்றுக்கு எத்தனை கலை என்று வாக்கியம் உள்ளது. அவை பின் வருவனவாகும் ;—

| | *1வது வாரம்* | *2வது வாரம்* | *3வது வாரம்* | *4வது வாரம்* |
|---|---|---|---|---|
| சித்திரை மாதம் | 11 | 14 | 16 | 17 |
| வைகாசி மாதம் | 19 | 21 | 22 | 24 |
| ஆனி மாதம் | 24 | 25 | 25 | 24 |
| ஆடி மாதம் | 24 | 23 | 22 | 22 |
| ஆவணி மாதம் | 19 | 17 | 15 | 13 |
| புரட்டாசி மாதம் | 11 | 8 | 6 | 3 |
| ஐப்பசி மாதம் | 2 | 1 | 3 | 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| கார்த்திகை மாதம் | 6 | 8 | 9 | 7 |
| மார்கழி மாதம் | 10 | 11 | 11 | 11 |
| தை மாதம் | 11 | 9 | 8 | 7 |
| மாசி மாதம் | 6 | 4 | 2 | 1 |
| பங்குனி மாதம் | 2 | 4 | 7 | 10 |

இந்த வார வாக்கியங்கள் அந்தந்த மாத நாட்களை நான்காகப் பகிர்ந்து கொண்டு அதற்குறியனவாகக் கொள்வதாம். கடந்த வாரங்களுக்குச் சொல்லியுள்ள யோக்கியாதி கலைகளைச் சேர்த்தும் வேண்டியதினத்திற்குரிய வாரத்தின் கலை கலை அந்த நாள் வீதப்படி கணக்கிட்டும் சேர்த்துக்கொள்ள வேண்டியது.

பஞ்சாங்க சூரியபுடம் உதாரணம்:—

கலியுக சகாப்தம் 5069 கீலகவூ மார்கழிமீ 15உ க்குக் கணித்துப் பார்ப்போம்.

| | இராசி | பாகை | கலை | விகலை |
|---|---|---|---|---|
| மேடாதி சென்ற மாதம் 8க்கு | 8 — | 0 — | 0 — | 0 + |
| தேதி 15க்கு | 0 — | 15 — | 0 — | 0 |
| கிரி | 8 — | 15 — | 0 — | 0 |

| | நாழி | விஞடி |
|---|---|---|
| மாதப்பிரவேச சங்கிரமகாலம் | 24 | 52 |

| | | | | |
|---|---|---|---|---|
| இதை இராசி மண்டல தூர அளவாக்க | | | 24 — | 52 |
| கிரியில் கழித்து வந்தது | 8 — | 14 — | 35 — | 8 + |
| | | | | — நீக்கம் |
| 15உ க்கு யோக்கியாதிகலை | 0 — | 0 — | 21 — | 0 |
| 15உ க்கு பஞ்சாங்க சூரியபுடம் | 8 — | 14 — | 56 — | 0 |

**அகஸ் கணிதம்:—**

அகஸ் என்ற பகல் நாழிகை உத்திராயண தக்ஷிணாயன காலங்களில் ஏற்றக்குறைவாக இருப்பதை முன்பே 6ஆம் இதழில் கூறப்பட்டிருப்பது நினைவுக்கு வரலாம். அவ்வித அகஸ் என்ற பகல்நாழிகையை வேண்டிய தினத்திற்குக் குறிப்பிட்ட இடத்துக்குக் கணிதம் செய்து பார்ப்போம். இவ்விதம் அகஸ்

கணிக்கும் விதமாவது சூரியபுடத்தில் அயனும்ஸம் சேர்த்து வந்தது சாயனரவிஸ்புடமாம். இதை முதலில் புஜை செய்தல் வேண்டும்.

புஜை செய்வது எவ்விதமெனின் சாயனரவி மேடம் முதல் மூன்று இராசிக்குள்ளாயின் புஜையில்லை. மூன்று இராசிக்குமேலாயின் அந்த இராசிபாகைகலைகளை 6இராசியில் கழிக்கவேண்டும். 6 இராசிக்கு மேல் 9 இராசிக்குள்ளாயின் அதில் 6 இராசியைக் கழிக்க வேண்டும். 9க்கு மேல் 12 இராசிக்குள்ளாயின் அதை 12 இராசியில் கழிக்க வேண்டும். இவ்விதம் செய்வது புஜா கோடியாகும்.

இவ்விதம் புஜாகோடி செய்தபின் புஜையில் இராசியில்லாவிட்டால் சுதேச சரகண்டத்தின் முதல் எண்ணைப் பெருக்கிப் பாகைகளை மட்டும் 30ஆல் வகுத்து வந்த ஈவு ரவிசர பலம் எனப்படும். புஜையில் ஒரு இராசியிருந்தால் இராசியை நீக்கிப் பாகங்களைச் சரகண்டத்தின் 2வது எண்ணால் பெருக்கி 30ஆல் வகுத்துவரும் ஈவுடன் சரகண்டத்தின் முதல் எண்ணைச் சேர்த்தல் ரவிசரபலம் எனப்படும். புஜையில் 2 இராசிகள் இருந்தால் இராசிகளை நீக்கிப் பாகாதிகளைச் சரகண்டத்தின் மூன்ருவது எண்ணால் பெருக்கி அதை 30ஆல் வகுத்து வந்த ஈவுடன் சரகண்டத்தின் முதல் இரண்டு எண்களைக் கூட்ட வருவது ரவி சரபலமாகும். இந்த ரவி சரபலத்தை இரட்டித்து வருவது விஞடியாகும். இந்த விஞடிகளை நாழிகையாக்கி இதைச் சாயனரவி மேஷ முதல் 6 இராசிக்கு உட்பட்டதாயின் பகல் பிரமாணமாகிய 30 நாழிகையில் சேர்க்கவேண்டும். சாயன ரவி 6 இரசிக்கு மேற்பட்டிருப்பின் பகல் பிரமாணமாகிய 30 நாழிகையில் கழித்தல் வேண்டும். இப்படிச் செய்தது அன்றைய அகஸ் என்ற பகல் நாழிகையாகும். இதைத் தினப் பிரமாணமாகிய 60 நாழிகையில் கழித்து வருவது அன்றைய இரவு நாழிகையாகும்.

உதாரண அகஸ்கணிதம் :—

| | இராசி | பாகை | கலை | விகலை |
|---|---|---|---|---|
| கிலக ஞ மார்கழி மீ 15உக்கு சூரிய புடம் | 8 — | 14 — | 56 — | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| கிலக ஹூ அயனும்ஸம் | 0 — | 22 — | 2 — | 6 |
| சாயரை விஸ்புடம் | 9 — | 6 — | 58 — | 6 |
| | இராசி | பாகை | கலை | |
| இராசி மண்டலம் | 12 — | 0 — | 0 — | |
| சாயனரவி | 9 — | 6 — | 58 | |
| புஜை | 2 — | 23 — | 2 | |

தஞ்சை பலச்சாயைக்குச் சரகண்டம் 23–18-7. புஜையில் 2இராசிகள் இருப்பதால் சரகண்டத்தின் மூன்ருவதுஎண்ணுல் இராசிநீக்கிப் பாகாதிகளைப் பெருக்க $0-23-2\times7=0.161-14$ இதில் 161 பாகைகளை மாத்திரம் 30ஆல் வகுக்க $161\div30=5$ஈவு; மீதி 11 நீக்கம். ஈவு 5ஐ சரகண்டத்தின் முதல் இரண்டாவது எண்களுடன்சேர்க்க $23+18+5=46$. இதை இரட்டிக்க $46\times2=92$. இது விருடியாகும். இதை நாழிகையாக மாற்ற 1 நாழிகை 32 விருடி. சாயனரவி 6 இராசிக்கு மேலானதால் பகல் பிரமாணம் 30 நாழிகையில் கழிக்க $30-1.32=28.28$. 28 நாழிகை 28 விருடி அன்றைக்கு அகஸ் ஆகும். இவ்விதம் எந்த இடத்திற்கும் அந்த இடத்துச் சரகண்ட மூலமாகப் பகல் நாழிகையைக் கண்டு கொள்ளலாம்.

(தொடரும்)

# தென்னாடுடைய சிவன்

திரு. மா. கோபால கிருஷ்ணன் அவர்கள்
ஆசிரியர், விரூர்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே — என்று நமிழ் நாட்டின் வளப்பத்தைக் கண்டு அனுபவித்து அதனை அகங் குளிரப் பாடி இன்பம் அனுபவித்துக் கவிதை வடிவிலே வடித்துக் கொடுத்தார் பாட்டுக் கொரு புலவராம் பாரதியார். "யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்பதற்கு இலக்கணமாகத் தான் பெற்ற இன்பத்தை அனைவரும் அனுபவிக்க வேண்டித் தமிழகத்தை இன்பத் தேனாக மாற்றினார்.

"தமிழ்" என்ற சொல்லுக்கு "இனிமை" என்பது பொருள். அப்படிப்பட்ட தமிழை வளர்த்த பெருமை பாண்டிய நாட்டுக்கு உண்டு. அந்நாட்டை வளம் பெறச் செய்வது வைகை ஆறு ஆகும். இதனைத் தமிழ் கண்ட வைகை எனச் சிறப்பித்து,

காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்க்
கண்டதோர் வையை பொருனை நதி — என
மேவிய யாறு பல வோடத் — திரு
மேனி செழித்தத் தமிழ் நாடு — என்று பாடினார்.

இப்படிப்பட்ட வளம் மிக்க ஆறுகள் பாய்வதால்தான் தமிழ்த் தாயின் திரு மேனி செழிப்புற்று விளங்குவதாகவும் தமிழகத்தின் பெயரைக் கேட்குமளவிலே தேன் வந்து பாய்வதாகவும் கூறுகிறார்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு, என்று சிறப்பிக்கப் படும் நம் தென்னகத்திலே தான் மேன்மை கொள் சைவ நீதியானது உலகெலாம் விளங்கும் பொருட்டு நாயன்மார்கள் தோன்றினார்கள். ஆழ்வார்கள் தோன்றினார்கள் - அடிய

வர்கள் தோன்றினார்கள். அவ்வடியவர்களுக்கு அருளும் பொருட்டு ஆண்டவன் அன்பின் வடிவமாகத் தோன்றி அருள் கொடுத்து அவனிக்குச் சைவ நெறியை விளக்கினார்.

"ஆளானவர் கட்கு அன்பனாகி - உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனாக விளங்குகின்ற சிவபெருமான் எழுந்தருளி யுள்ள தலங்கள் தென்னகத்திலே பல. சிவ ஆலயங்கள் பொலிவு பெற்றுச் சிறந்து விளங்கும் இடங்கள் தென்னகத் தில் அன்றி பிற இடங்களில் மிகுந்து காணப்படுவது அரிது.

**"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே**
**வழுவா திருக்க வரம் தர வேண்டு மிவ் வையகத்தே..."**

என்று வரம் கேட்ட "பா" வுக்கு அரசராக விளங்கிய நாவுக் கரசருக்கும், "நாயிற் கடையாய்க் கிடந்த அடியவராகத்" தம்மைத் தகுதியற்றவராக்கிக் கொண்ட வாசகச் செம்மல் மாணிக்கவாசகப் பெருமானுக்கும் தாயிற் சிறந்த தயாவான தத்துவனாகிப், பாசமாகியப் பற்றினை அறுத்து, நேசமாகிய அருளைப் புரிந்தவர் தில்லையுள் நடம்புரியும் தென்பாண்டி நாட்டானாகிய சிவபெருமானே ஆவார்.

"உலகெலாம் படைத்துக் காத்து உருவிலாது அழிக்கின் றவராகவும் விளங்குகின்ற காரணத்தாலும்,

**"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்**
**கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.**

*(திருவாசகம்)*

என்பதாலும்

**"தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்**
**காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ**

*(திருவாசகம்)*

என்ற அடிகளாலும் தென்னாடுடைய இறைவனாகிய சிவபெரு மான் அருவமும் உருவமும் ஆகி உலகம் முழுவதும்—எல்லா மக்களுக்கும்—எல்லா நாட்டினருக்கும் இறைவனாக விளங்கு கிறான் என்பதனை மணிவாசகப் பெருமான்,

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி"**

என்று கூறுகின்ற காட்சி பேரின்பம் பயப்பதாகும்.

> "செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
> பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
> எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
> தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
> அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
> அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.
>
> *(திருவாசகம்)*

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாக விளங்கி எல்லோருக்கும் இன்னருள் புரிகின்ற பான்மையை நினைந்து "அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்" சிந்தை மகிழச் சிறப்புற்று வாழ்வோமாக.

> "உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
> பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
> மருவித்திகழ் தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
> திருவைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.
>
> *(திருவாசகம்)*

# HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

( மலர் 19. இதழ் 11-ன் தொடர்ச்சி )

## IV

## MANIKKA VASAHAR

(Sanskrit form Manikya Vachaka)

98 ஏசினும்யானுன்னையேத்தினுமென்பிழைக்கேகு
ழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பிற்
றேசுடையாயென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கி
ரங்கிக்
காய்சினவாலமுண்டாயமுதுண்ணக்கடையவனே.

98 Whether I praise or curse Thee, still I'm stained
with sin and sorrowing.
Yet, wilt Thou leave me? Splendour shining
like the red-hued coral mount,
Master, thou drankest poison black, the humbler
beings pitying,
That I, Thy meanest one, might find no poison,
but a nectar fount.

(To be continued )

---

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N. B. Copies available for sale at the above Press.)

திருச்செந்திலாண்டவன் துணை

# திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

## அற்புதப் பத்து

**இனி, அற்புதப் பத்தாவன.**

அகத்தியச் சூத்திரம்,

**கற்பனை கழறும் அற்புதப் பத்துத்**
**தனிய தீதமாய் அநுபவ மாற்றுமை.**

**பொழிப்புரை** :— முற்பதிகக் குஞ்சிதபாத தரிசனமே பரமுத்தி யடிமை இன்பமென அருளி, மேல் எல்லாம்வல்ல சித்தென்பதும் எளிமையேன் பொல்லாங்கெல்லாம் அருளாற் பொறுததாண்டு கொண்டருளுமானந்த சுவாநுபூதி யென்பதும் அருளியது.

**ஆசிரிய விருத்தமாகத் திருப்பெருந்துறையி** லோதியது.

567. இனி, திருவடி முன்னின்றருளிய சிவானந்தமான (தி. - ன.) :—

**மைய லாமிந்த மண்ணிடை வாழ்வெனும் ஆழியுளகப்படடுத்**
**தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான் தலைதடு மாறுமே**
**பொய்யெ லாங்கெடத் திருவருள் தந்துதன் பொன்மலரடிகாட்டி**
**மெய்ய னுய்வெளி காட்டிமுன் நின்றதோர் அற்புதம் விளம்**
**[பேனே.**

(இ - ள்). ஆண்டவனே! ஓரானந்த விண்ணப்பம்; வஞ்சப்பெண் வாழ்க்கையாலே, தலைதடுமாருகப் போகாவண்ணம், யானெனதென்னும் பொய் கெடுவதாகத் திருவருளிரங்கிப் பாதுகாக்கத் திருவடி மலரை அருளாற் காட்டி, சத்திய போதநாதனுய் அடியேன் காண எழுந்தருளிய அற்புதம் எவ்வகை வாயால் வழுத்துவேன்! எனவே, மவுனானந்தம் பெறுவதே சுவாநுபூதி என அருளியதைக் காண்க.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதிபெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

# நம்மையாட்கொண்ட நல்லோன்

திரு. ஸ்ரீராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை-1.

"மயக்கறு மறையோலிட்டு மாலயன் தேட நின்றான்"

என்று சிவபெருமானைக் குறிப்பிடுகின்றார் அருள்மொழித் தேவர். இவ்வாறு பிரமவிட்டுக்களால் அறிய முடியாத மலை போன்ற இறைவனைப் பார்த்தாற்போல் பேசக்கூடியவளே!" என ஒருத்தியை எழுப்புகின்றனர்.

மாலறியான் மலரோனறியான் மகவோனறியான்
காலறியான் மற்றைவானோர் கனவிலும் கண்டறியார்
சேலறியாவிழி மங்கைபங்கா! நின் திறத்தை மறை
நாலறியா வெனின் நானறிவேனெனல் நாணுடைத்தே — *அருட்பா.*

அப்படிப்பட்ட இறைவனை நம்மாலறிய முடியுமா? அறிய முடியு மென்றால் அது வெறும் பேச்சேயாகும். பாலூறுவது போலவும், தேன் சுரப்பது போலவும் பேசுகின்றாயா? இறைவனை யறிந்தேன் என்று பொய் பேசுகின்றாயே!

மாலறியா நான் முகனும் காணுமலையினை நாம் —
போலறிவோ மென்றுள்ள
பொக்கங்களே பேசும் - பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்!

"இப்படிப் பேசக்கூடியவளே கதவைத் திற" என்கின்றனர். கண்டேன் எனப் பொய் பேசினாலும் "கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியன்" ஆகிய இறைவனைப் பேசியதால் அவள் பாலும் தேனும் ஊறும் பவளவாயினள் ஆகிவிட்டாள் என்பது குறிப்பு. "ஞாலமே பிறவே அறிவரியான்" அன்றோ அப்பெருமான். அப்படிப்பட்ட பெருமான் நம்மையாட் கொண்டு அருள. தானே வரும் பெருமை யுடையவன்.

பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலும் காண்டற்கு அரியான்; எமக்கு எளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாராவழி யருளி வந்தென்னுள்ளம் புகுந்த
ஆராவமுதாய் அலை கடல்வாய் மீன் விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங் காண் அம்மானாய் - *திருவாசகம்,*

என்றபடி அழகிய தம் கோலத்தை நமக்குக்காட்டி, அருளக் கூடிய பெருமான். ஓதியுணராது அலறி ஓலமிடும் வேதத்தைப் பாதுகையாகக் கொண்டவன். இடைக் காட்டுப் புலவனுக்காக நடந்த பாதங்களையுடையவன். பாண்டியனொருவனுக்காக மாறியாடிய திருவடிகளையுடையவன் பிட்டுண்ட வயிறும், பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த மார்பும், மாணிக்கம் விற்றமலர்க் கரமும், வேதத்திற்குப் பொருளருளிச் செய்த திருவாயும், தமிழ் கேட்ட காதுகளும், மாமனாக வந்து மருமகனைக் கண்டு கண்ணீர் சொரிந்த கண்களும், விறகு சுமந்த திருவடியும் உடைய தமது கோலத்தைக் காட்டியருளும் பெருமான்.

செங்கணெடு மாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்குதிரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய் —

இப்பேர்ப்பட்ட பெருமானை "சிவனே, சிவனே" என நாங்கள் பாடுகின்றோம். "அழமழுவொன்றற்களித்தனன் தீம்பால் அம்பலத்தாடிய பெருமான்" என்றும் "அழுதால் உனைப் பெறலாமே" எனப்பெரியோர்கள் கூறியுள்ளார்கள். எல்லா இடங்களிலும் மலைபோன்று பெருமையுடன், ஒளிமயமாகத் திகழ்ந்து இன்பமயமாய், எல்லாவற்றையும் தனக்குள் அடக்கிக்கொண்டு, மனவாக்குகளுக்கெட்டாது, எல்லாரும் என் தெய்வமென்று எண்ணக்கூடியதாய், என்றைக்குமுள்ள பெருமானை அழைத்தால், அருள்செய்ய இரங்கி வருவான்.

போற்றிஓம் நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்!
போற்றிஓம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை!
போற்றிஓம் நமச்சிவாய புறமெனைப் போக்கல்கண்டாய்!
போற்றிஓம் நமச்சிவாய சயசய போற்றி.

இவ்வளவு பெருமையுள்ள சிவனை வணங்கி, அந்தச் சீரிய தத்துவத்தை உணர வேண்டாமா? அதைவிட்டு நான் 'இறைவனை அறிவேன்' என்று பொய்சொல்லித் தூங்கலாமா? என எழுப்புகின்றான்.

தாமத குணமுடையவருக்கு இறை தத்துவம் புரிவது மிகவும் அரிது. தூங்கும் ஒருத்தி இறைவனையறிந்ததாக எண்ணித்தூங்க, அது பொய்யென்றும், நினைத்தாலே அன்புக்கு இரங்கிவரும் கருணைக்கடல் இறைவன் என்பதை

என்னையொன்று மறியாத இளம்பருவந்தன்னிலே
என்னுள்ளத்தே அமர்ந்தருளி யான்மயங்குந்தோறும்
அன்னையெனப் பரிந்தருளி அப்போதைக்கப்போது
அப்பனெனத் தெளிவித்தே அறிவுறுத்திநின்றாய்!
நின்னையெனக் கென்னென்பேன்? என்உயிரென்பேனோ?
நீடிய என்னுயிர்த்துணையா நேயமதென்பேனோ?
இன்னலறுத்தருள்கின்ற என் குருவென்பேனோ?
என்னென்பேன் என்னுடைய இன்பமதென்பேனே — *அருட்பா.*

"நான், என்னுடையது" என்பதை விட்டு, சத்துவகுணத்தோடு, தன்னை மறந்து நினைப்பவர் நெஞ்சில் கோயில் கொள்ளும் பெரியோன்" எனப்பெரியோர் கூறுவர். எனவே தாமத குணத்தை விடுவோர்க்கு இறைவன் தண்ணருள் செய்வான். அவன் நாமம் பாடி அவனை அடைவோம் வா, சாந்தணிந்த கூந்தலுடையவளே!" என அழைக்கின்றனர்.

தாமதகுணம் நீங்கி தாயானதத்துவனை யடைந்து அருள் பெற அவன் கழல் வேண்டுவோமாக!

மாலறிய நான்முகனும் காணுமலையினை நாம்
போலறிவோம் என்று உள்ளபொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப்படிறீ கடைதிறவாய்!
ஞாலமே, விண்ணே, பிறவே அறிவறியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனேசிவனே என்று
ஓலமிடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் — *திருவெம்-5.*

—: திருச்சிற்றம்பலம் :—

# சீர்காழிச் சட்டைநாதர் வைகாசி மாசப் புழுகுநெய் சாத்து நிதி ரூ. 2000.

சீர்காழியில் திருத்தோணிச் சிகரத்தில் எழுந்தருளியுள்ளவரும், குருலிங்க சங்கம மூர்த்திகளில் சங்கம மூர்த்தியாக விளங்குபவரும், இரணியன் உயிரை மாய்த்த நரசிங்கத்தைப் பிளந்து அதன் எலும்பைக் கதையாகவும், தோலைச் சட்டையாகவும் கொண்டிருப்பவரும், தண்டபாணி சட்டைநாதர், வடுகநாதர், ஆபத்துத்தாரணர் எனப்பல திருநாமங்கள் பூண்டவரும், வழிபடுமவர்க்குச் சர்வக்ஞதை முதலிய ஞானிசித்திகளும் அணிமா முதலிய யோகசித்திகளும் அருள்பவரும் ஆகிய சீர்காழிச் சட்டைநாதருக்கு வைகாசி மாசத்தில் ஒரு வெள்ளிக்கிழமையில் புழுகுநெய் சார்த்துவதற்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப் பெற்றது. இது 'சீர்காழிச் சட்டைநாதர் வைகாசி மாசப்புழுகு நெய் சாத்து நிதி' எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 2000/- ரூ. இரண்டாயிரம். இது ஆண்டொன்றுக்கு 6½-% வட்டி தரக் கூடிய நிலையான முதலீடாகக் கும்பகோணம் ஸ்டேட் பாங்கில் 60 மாதங்களுக்கு முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டெபாசிட் எண். 076797 ரூ. 1000/-. எண். 076798/- ரூ. 1000/- – 60 மாதங்கள் - 11-11-1973ந் தேதி வரை. ஆக ரூ. 2000/- இந்நிதி நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப்பெற்றவரும்.

3. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களால் தருமநிதி நிறுவப்பெற்று ஆடிமாதம் முதல் வெள்ளிக்கிழமையிலும், நம்மால் தரும நிதிகள் ஏற்படுத்தப் பெற்றுச் சித்திரை, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாசங்களில் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமையிலும் சீர்காழிச் சட்டைநாதருக்குப் புழுகு நெய் சார்த்தப் பெற்றுவருகிறது. வாரணாசியில் ஸ்ரீ காசி கேதாரீசுவரர் கோயில் பைரவருக்கு மாதந்தோறும் அஷ்டமியில் அபிஷேக நிவேதனம் நடைபெற்றுவருகிறது. கார்த்

திகை மாதத்தில் காலபைரவாஷ்டமி தினத்தில் வாரணாசியி லும், திருலோக்கிலும் காலபைரவருக்கு விசேஷ அபிஷேக நிவேதனம் நடத்தப்பெற்றுவருகிறது. மார்கழி மாசம் கால பைரவாஷ்டமி தினத்தில் வாரணாசியில் காலபைரவருக்கு அபிஷேக ஆராதனை விளக்கீடும், இராமேசுவரம், காசி மடத்தில் பைரவருக்கு அபிஷேக ஆராதனையும் நடைபெற்று வருகிறது. அவ்வண்ணமே சீர்காழித் திருக்கோயில் திருத் தோணிச் சிகரத்தில் எழுந்தருளியுள்ள சட்டைநாதராகிய பைரவமூர்த்திக்கு ஆண்டுதோறும் வைகாசி மாசத்தில் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமையில் புழுகு சட்டம் சார்த்த வும், அம்மூர்த்திக்கு வடைமாலை சூட்டிப் பாயசம் நிவேதிக் கச் செய்யவும் இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட் டித் தொகையில் நிர்வாகச் செலவுபோக எஞ்சிய தொகை முழுவதும் பயன்படுத்தப்பெற்றுவரும்.

4. மேற்படி தருமம் நம்மால் ஆண்டுதோறும் கால விலைக்கு ஏற்பவும், வட்டி வரவுக்கு ஏற்பவும் தயாரிக்கப் பெறும் திட்ட ஜாப்தாவின்படி நடத்தப்பெற்றுவரும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இந்நிதி நம்பேறிலும் நமக்குப்பின் உரிமை யுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இம்முதற்பொருள் திருப்பியளிக்கப்பெற்றதும் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களிலோ நிலையான முதலீடுகளிலோ முதலீடு செய்யப்பெறும்.

**விறித்த பல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகங்கை**
**தறித்ததோர் கோல கால பயிரவ னுகி வேழம்**
**உறித்துமை அஞ்சக் கண்டு ஒன்திரு மணிவாய் விள்ளச்**
**சிறித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.**

Tirupanandal
Dated 15-11-1968 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

Registered at Tiruvadamarudhur Sub Registrar's Office on 16-11-1968. as No. 37 of Book 4 vol. 55 pages 25-27

உ

திருப்பனந்தாள் — ஸ்ரீ காசி மடம்

# 'திருமுறை வெளியீடுகள்'

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) | 3 | 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் | 0 | 40 |
| 3 | .. சிதம்பர மும்மணிக்கோவை ,, ... | 0 | 20 |
| 4 | .. மதுரைக்கலம்பகம் ,, ... | 0 | 40 |
| 5 | .. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் .. .. | 0 | 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக்கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 | 75 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 25 |
| 8 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச்செய்யுட் கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை | 1 | 00 |
| 9 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ... | 1 | 00 |
| 10 | சிதம்பரச் செய்யுட்கோவை ... | 0 | 75 |
| 11 | நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும், ஹிந்தியும் ... | 0 | 50 |
| 12 | .. - மூலம் ... | 0 | 10 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்-மூலம் ... | 0 | 15 |
| 14 | கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும் ... | 0 | 10 |
| 15 | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ... | 3 | 00 |
| 16* | மூவர் தேவாரம் அடங்கன்முறை - தலமுறை .. | 8 | 75 |
| 17* | சுந்தரர் தேவாரம் .. ... | 1 | 30 |
| 18 | ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் மூலம் மட்டும் ... | 0 | 56 |
| 19* | .. .. தெளிவுரை ... | 1 | 50 |
| 20* | பதினோராம் திருமுறை ... | 1 | 50 |
| 21* | ஒருதுறைக்கோவை ... | 1 | 75 |
| 22* | அகத்தியர் தேவாரத்திரட்டு ... | 0 | 36 |
| 23 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 | 25 |
| 24 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ... | 0 | 50 |
| 25 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 | 37 |
| 26 | திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும் ... | 0 | 19 |
| 27 | பழமொழித்திருமுறை ... | 0 | 25 |
| 28 | அப்பர்விழா வெளியீடு ... | 0 | 25 |
| 29 | Hymns and Proverbs ... | 0 | 30 |
| 30 | திருவாரூர்-திருப்பனுவல்கள் ... | 0 | 10 |
| 31 | திருவாரூர் நான்மணிமாலை ... | 0 | 50 |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.
Regd. No M. 5574 

| | | |
|---|---|---|
| 32 | திருத்தொண்டர் புராணசாரம் ... | 0 40 |
| 33 | திருவிளையாடற்புராணம் உரை நடை ... | 2 25 |
| 34 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) ... | 1 75 |
| 35 | கந்தபுராணம்-முதல் மூன்று காண்டங்கள்(மூலம்மட்டும்) | 2 75 |
| 36 | ,, யுத்த தேவ காண்டம் ... | 2 00 |
| 37 | ,, தக்ஷகாண்டம் ... | 1 50 |
| 38 | கந்தபுராண உரைநடை .... | 3 00 |
| 39 | கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன் ... | 0 25 |
| 40 | கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் .. | 1 25 |
| 41 | ஐந்து நீதி நூல்கள் ... | 0 10 |
| 42 | நவக்கிரகமாண்பு ... | 0 25 |
| 43 | ஸ்ரீ சயிலம் ... | 0 10 |
| 44 | திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் ... | 0 37 |
| 45 | திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ... | 0 10 |
| 46 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும் ... | 1 50 |
| 47 | திருக்குறள்-பொருட்பால் .. ... | 2 50 |
| 48 | திருக்குறள் - காமத்துப்பால் .. ... | 1 00 |
| | ஷை 47, 48, 49 திருக்குறள் 3புத்தகமும் ... | 4 00 |
| 49 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கில மொழிபெயர்ப்புடன் | 1 00 |
| 50 | திருக்குறள் பரிமேலழகர் உரையுடன் கூடியது (முப்பாலும் சேர்ந்து) ... | 2 25 |
| 51 | திருக்குறள்-உரைக்கொத்து-பொருட்பால் 2-ம் பதிப்பு | 2 75 |
| 52 | தாயுமானசுவாமிகள் பாடல் குறிப்புரையுடன் ... | 1 25 |
| 53 | குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும் ... | 0 30 |
| 54 | திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ... | 0 13 |
| 55 | செந்திலாண்டவன் மகிமை ... | 0 15 |

*மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:*

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

*"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு.*
*திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5*

குறிப்பு: * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் எண் 51, 52 தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமர குருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்-68.